ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## ஐந்தாம் வகுப்பு

(முதல் பருவம் )


ஆசிரியர்கள்

**குரும்பை உலகநாதன்**

**ச.ஜெயலக்ஷ்மி M.A., B.Ed.,**

**காயத்திரி ஸ்ரீகாந்த் D.C.A., DIEd., B.Lit.,**

ஸ்ரீ நடேசன் வித்யாசாலா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
சென்னை - 48

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**



ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

Ⓒ உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
முதல் பதிப்பு : 2020 (பொதுப் பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டும் தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறிகளைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது, குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறன் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு ( **CCE METHOD** ) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி | தமிழின் இனிமை | 5 |
| | | கவிதைப் பட்டிமன்றம் அறிவா? பண்பா? | 8 |
| | | என்ன சத்தம் .... | 14 |
| | | மரபுச்சொற்கள் | 19 |
| 2. | கல்வி | மூதுரை | 29 |
| | | கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் | 32 |
| | | வறுமையிலும் நேர்மை | 38 |
| | | பெயர்ச்சொல், வினைச்சொல் | 42 |
| 3. | இயற்கை | கடல் | 50 |
| | | படம் இங்கே! பழமொழி எங்கே? | 53 |
| | | தப்பிப் பிழைத்த மான் | 58 |
| | | சொற்றொடர் அமைப்பு முறை | 64 |




# 1. தமிழின் இனிமை!

**நுழைவாயில் :**

செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பினை பாரதிதாசன் தனது பாடலில் வெளிப்படுத்தினார். அப்பாடலில் ஒன்றை பாடி மகிழ்வோம்.



கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

- பாரதிதாசன்

**சொல்லும் பொருளும் :**

1. கனி - பழம்
2. நனி - மிகுதி, மிகை
3. கழை - கரும்பு
4. நல்கிய - வழங்கிய
5. கண்டீர் - பார்த்தீர்
6. பாகு - இளகிய வெல்லம்



## பாடலின் பொருள்

இயற்கையில் பல்வேறு வகையான சுவைகள் இருக்கின்றன. நன்கு பழுத்த பழங்களின் சுளையில் இனிமை இருக்கிறது. நன்கு விளைந்து முற்றிய கரும்புச் சாற்றிலும் இனிமை உண்டு. மலர்களில் இருந்து எடுக்கப்பட்ட தேனிலும் இனிமை உண்டு. காய்ச்சிய வெல்லப் பாகிலும் இனிமை உண்டு. சிறந்த பசு தந்த பாலும் இனிமையானது. தென்னை மரத்திலிருந்து பெறப்பட்ட குளிர்ந்த இளநீரின் சுவையும் இனிமையானவையே. ஆனால் தமிழ் இத்தகைய சுவைகளை எல்லாம் விட உயர்ந்தது. தமிழோ என் உயிர் போன்றது என்கிறார் பாரதிதாசன்.

கனி, கரும்பு, தேன், பாகு, பால், இளநீர் அனைத்தின் சுவையும் உயிர் என்ற ஒன்று இருந்தால் தானே நுகர முடியும்.

## நூல் வெளி :



இயற்பெயர் : கனகசுப்புரத்தினம்

புனைப்பெயர் : பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் தனது பெயரை மாற்றி பாரதிதாசன் என புனைப்பெயராக அமைத்துக் கொண்டார்.



தொழில் : தமிழாசிரியர், கவிஞர்

எழுதிய படைப்புகள் : தமிழின் இனிமை, பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு

சிறப்புப்பெயர்கள் : புரட்சிக்கவிஞர், பாவேந்தர்

காலம் : 29.04.1891 முதல் 21.04.1964 வரை

## கற்பவை கற்றபின்

- பாடலை சரியான உச்சரிப்புடன் படித்து மகிழ்க.
- தமிழை உயிர் எனப் பாரதிதாசன் அழைப்பதுபோல் நீங்கள் தமிழை எவ்வாறு அழைப்பீர்கள் ?
- தமிழ்மொழி பற்றிய கவிதைகளைப் படித்து மகிழ்க.

## மதிப்பீடு

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. கழை - இச்சொல் உணர்த்தும் சரியான பொருள் ____________

அ) கரும்பு ஆ) கறும்பு இ) கருப்பு ஈ) கறுப்பு

2. கனியிடை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------------

அ) கனி + யிடை ஆ) கணி + யிடை

இ) கனி + இடை ஈ) கணி + இடை

3. பனி + மலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் --------

அ) பனிம்மலர் ஆ) பனிமலர் இ) பன்மலர் ஈ) பணிமலர்

**ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. கழையிடை - ---------------------- + ----------------------
2. என்னுயிர் - ---------------------- + ----------------------

**இ. பெட்டியிலுள்ள சொற்களைப் பொருத்தி மகிழ்க.**

1. பால் - [ ]
2. சாறு - [ ]
3. இளநீர் - [ ]
4. பாகு - [ ]

| |
|---|
| கரும்பு |
| வெல்லம் |
| பசு |
| தென்னை |

**ஈ. இப்பாடலில் வரும் ஒரே ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுக.**

**உ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக.** ---------------------- ----------------------

**ஊ. பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

---------------------- ----------------------

**எ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?
2. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

**ஏ. சிந்தனை வினா**

1. பாரதிதாசன் சிலவற்றை இனியன என்று கூறுகிறார். உனக்கு எவையெல்லாம் இனிமையானவை? ஏன்?

**ஐ. பயிற்சி : விடுபட்ட பாடல் வரியை எழுதுக.**

நனிபசு பொழியும் ----------------------

---------------------- குளிரிள நீரும்

# 2. கவிதைப் பட்டிமன்றம் - அறிவா? பண்பா?

**நுழைவாயில் :**

பேச்சுத்திறன் என்பது அடிப்படைத்திறன், பேச்சாற்றல் திறன் என்பது உயர்நிலைத்திறன். எனவே பேச்சுத்திறனின் வளர்ச்சி நிலையே பேச்சாற்றல் திறன் ஆகும். பேச்சாற்றலின் அவசியம் கருதி வரும் பாடங்களுள் ஒன்று, இப்பட்டிமன்றம்.



பாரதியார் இளமையிலேயே கவிபாடும் திறன் பெற்றவர். தனது 11வயதில் பலர் நிறைந்த அவையினிலே தாம் இயற்றிய கவிதையை வெளியிட்டார். ஆகவே கவி பாடும் திறமையை இளமையினிலேயே வளர்த்துக் கொள்வது மிகவும் சிறந்தது. இலக்கியத்தின் ஒரு வடிவமான கவிதை நடையில் இப்பாடம் புதுமையாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடப்பகுதியில் கவிதைக்குரிய எதுகை, மோனை, உவமைச்சிறப்பு, சொல்லாடல் போன்ற நயங்கள் சிறந்து காணப்படுகின்றன. ஆசிரியர்கள் கவிதைப் பட்டிமன்றத்தை ஏற்ற இறக்கத்துடன் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இடம் : பள்ளிவளாகம் காலம்: பிற்பகல் 3.00 மணி

உறுப்பினர்கள் : நடுவராகச் சிறப்பு விருந்தினர்
ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் விசால், ஆரீஸ், சரண்,

நடுவர் : தமிழமுதே! வண்ணத்தமிழே!
உலகு போற்றும் முதுமொழியே!
தேன்தமிழ் சொல்லெடுத்து
செந்தமிழில் பேச பட்டிமன்றத்தில்
நடுவராக நான் வந்துள்ளேன்.
வணக்கம்.
இனிக்கும் தேன்தமிழில்
எட்டுத்திசை புகழ்பரப்பும் இனிய கவிதையால்,
மிகவும் தேவை அறிவா? பண்பா?
என பாட வருகின்றனர்
பாராட்டுக்குரிய நால்வர்,
இனிமையாக பேசும் விசால்
சொற்சுவையுடன் பேசும் பாக்கியா
அருமையாக கவிபாடும் சரண்
சீராய் பேசும் ஆரீஸ்....
முதல் கவிதை பாடிடவே
முதன்மையாய் அழைக்கிறேன். விசாலை ........

விசால் : அன்னைத் தமிழில் ஆன்றோருக்கும்
சான்றோருக்கும் கவியரங்கத் தலைவருக்கும்
அறிவு தான் ‘முன்னேற்றத்தின் ஆணிவேர்’
என்று கூற வந்துள்ளேன்.
"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்".
அப்துல்கலாமின் அக்னி சிறகு
சரித்திரம் படைத்து உலகினிலே
இன்றும் சுடராய் விளங்குவது அறிவாலே!
கணிதமேதை இராமானுஜர்
உலகம் போற்ற நிற்பது அறிவாலே!
அறிவின் ஆயுதம் கொண்டு
கண்டுபிடிப்புகள் பல உண்டு
தன் அறிவியல் அறிவால் நிகழ்த்தியவர்
சர்.சி.வி.இராமன், தாமஸ் ஆல்வா எடிசனுமே
அறிவால் உயர்ந்து நிற்பவரே
உலகத்தை நம் கையில் கொண்டு வர

அறிவு மிகவும் அவசியமே
என்று கூறி விடை பெறுகிறேன்.

நடுவர் : விசாலின் இனிய கவிதை
அறிவாயுதம்...இப்போது
சீராய்ப் பேசி சிறப்பாய் கவிபாட
வருகிறார் ஆரீஸ் ... .... ...

ஆரீஸ் : வாழ்வில் வெற்றிபெற
வையகமும் கையில் வர
நற்பண்பு பெற்றிடுவோம்
நயம்பட வாழ்ந்திடுவோம்
என்று கூற வந்துள்ளேன்.
"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்".
நற்பண்பு இருக்குமெனில்
அக இருளைப் போக்கிடுமே
அன்பு மனம் தந்திடுமே
பண்பாலே சிறந்தவர்கள்
பாரினிலே பலர் உண்டு
புத்தரும் வள்ளுவரும் பண்பில் சிறந்தவரே
இவர்கள் போதித்த நற்பண்பை
பெற்று நாமும் பாரினிலே
பெருமையுடன் வாழ்ந்திடுவோம்.

நடுவர் : நற்பண்பு பற்றியே
நன்கு பாடினார் ஆரிஸ்...
அருமைமிகு கவிதையில்
அறிவாற்றல் பயன்பற்றி
கூறிடவே வருகின்றார்............ சரண்

சரண் : அறிவாற்றல் இருக்குமெனில்
அகிலத்தை ஆண்டிடலாம்
பாரினை ஆண்டிடவே
பண்பு மட்டும் போதாது
வெறும் பண்பினை வைத்துக் கொண்டு

பெரும் பந்தல் போட முடியுமா?
அறிவின் பயனே அற்புதங்கள் செய்திடுமே
வானைத் தொட்டிடவே
வழிகாட்டி உதவிடுமே.

நடுவர் : பண்பின் பெருமையினை
பட்டிமன்றத்தில் கூறிடவே
சொற்சுவையுடன் பேசும்
பாக்கியா வந்திடுக.
இன்பத் தமிழிலே
இனிதே உரைத்திடுக.

பாக்கியா : பண்பிலான் பெற்ற செல்வம்
பதராய்ப் போய்விடுமே
நற்பண்பு குணத்தாலே
அதியமான் ஔவைக்கு
கொடுத்தது நெல்லிக்கனி
எளியோரை ஆதரித்த
அன்னைத் தெரசாவும்
நற்பண்பு பெற்றவரே
அதனாலே இன்றளவும்
நம் நினைவில் நிற்பவரே

நடுவர் : எல்லோரும் பொழிந்த
கவிதை மழையில்
நனைந்திட்டேன் நானே
கண்ணுக்கு இருவிழிபோல்
மனிதருக்கு அவசியம்
அறிவும் பண்புமே
இவ்விரண்டும் பெற்றே
உலகையே ஆண்டிடலாம்
என்று தீர்ப்பு கூறி
நானும் விடை பெறுகிறேன் ...
நன்றி! வணக்கம்!

## கற்பவை கற்றபின்

- அறிவு, பண்பு - நீ எவற்றைப் பெற விரும்புகின்றாய்?
- ‘அறிவுதான் முன்னேற்றத்தின் ஆணிவேர்’ - இது பற்றிய உனது கருத்து யாது?
- நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிப்பவர் அறிவுடையவரா? பண்புடையவரா? வகுப்பறையில் உரையாடுக.

## படித்து அறிக

**பட்டிமன்றத் தொடக்க விழா**

**நிகழ்ச்சி நிரல்**

- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை : சேதுப்பிரியா, ஐந்தாம் வகுப்பு
- தலைமை உரை : தலைமையாசிரியர்
  ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
  முடிச்சூர்
- சிறப்பு உரை : சிறப்பு விருந்தினர்
  முனைவர். இரா.அன்பழகன்
  மாவட்ட இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை
- நன்றி உரை : ஐஸ்வர்யா, நான்காம் வகுப்பு
- நாட்டுப்பண்

## மதிப்பீடு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. நற்றமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) நல் + தமிழ் ஆ) நற் + றமிழ்

   இ) நன்மை + தமிழ் ஈ) நல்ல + தமிழ்

2. உலகம் என்னும் பொருளைக் குறிக்காத சொல் ____________

   அ) வானம் ஆ) அண்டம் இ) செகம் ஈ) அகிலம்

3. அறிவு + ஆயுதம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ____________

   அ) அறவாயுதம் ஆ) அறிவாயுதம்

   இ) அறிவாயுதம் ஈ) அறிவாய்தம்

4. இகழ் - இச்சொல்லின் எதிர்ச்சொல் ----------------------------------------

அ) புகழ் ஆ) மகிழ் இ) திகழ் ஈ) சிமிழ்

5. சரித்திரம் - இச்சொல்லைக் குறிக்கும் சொல் ------------------------------

அ) வரலாறு ஆ) நிகழ்வு இ) சூரியன் ஈ) இருள்

6. வண்ணத்தமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------------

அ) வண்ணத் + தமிழ் ஆ) வண்ணம் + தமிழ்

இ) வண்ண + தமிழ் ஈ) வன் + தமிழ்

7. சொற்சுவை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ----------------

அ) சொற் + சுவை ஆ) சொற்சு + வை

இ) சொ + சுவை ஈ) சொல் + சுவை

8. பண்பு + இலான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ---------------

அ) பண்புஇலான் ஆ) பண்பில்லான்

இ) பண்புஇல்லான் ஈ) பண்பிலான்

## ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. செந்தமிழ் 2. கவியரங்கம் 3. தமிழமுது 4. முதுமொழி 5. அறிவாற்றல்

## இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அறிவால் உயர்ந்தவர்களாக விசால் யார் யாரைக் குறிப்பிடுகிறார்?
2. பண்பால் சிறந்தவர்களாக ஆரீஸ் எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?
3. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார், யாருக்குக் கொடுத்தார்?
4. நடுவர் கூறிய தீர்ப்பை உன் சொந்த நடையில் கூறுக.
5. ஐம்பொறிகளுள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நான்கையும் கூறுக. கண், ..................., ................., ...................., ..................
6. தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.
7. நீ நடுவராக இருந்திருந்தால் என்ன தீர்ப்பு வழங்கியிருப்பாய்?

## ஈ. சிந்தனை வினாக்கள்

1. கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் எது சிறந்தது என நீ கருதுகிறாய்? ஏன்?
2. ‘வெறும் பண்பை வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போடலாமா?’ இத்தொடருக்கான பொருளை உம் சொந்தநடையில் வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

# 3. என்ன சத்தம் ...

**நுழைவாயில் :**

நம் முன்னோர் கூறிய மரபுச் சொற்களை தொன்று தொட்டு இன்றும் பின்பற்றி வருகிறோம். இப்போது பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் ஒலிப்பு முறைகளையும் எவ்வாறு நம் முன்னோர் அழைத்தனர் என்பதைக் காண்போம்.



செல்வமணி உயர்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் அப்பா ஒரு விவசாயி. மலை அடிவாரத்தில் அவர்கள் வீடு. அவர்கள் வீட்டை ஒட்டி ஒரு அடர்ந்த காடு. அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளி விடுமுறை நாள் என்பதால் ஆடுகளை மேய்ச்சலுக்காக காட்டிற்குள் ஓட்டிச் சென்றான்.

ஆடுகள் காட்டில் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. ஓர் அடர்ந்த மரத்தினடியில் அமர்ந்து செல்வமணி ஆடுகள் மேய்வதையும், காட்டின் அழகையும் இரசித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது மரத்தின் மேலிருந்த குரங்குகள் சண்டையிட்டு விளையாடின. குரங்குகளின் அலப்பும் அலப்பறை ஓசை செல்வமணிக்கு எரிச்சலை உண்டாக்கின.எனவே அருகிலிருந்த வேறு ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அம்மரத்திலிருந்த குயில்கள் குக்கூ குக்கூ ... எனக் கூவியது. அணில்கள் ஓடிப்பிடித்து விளையாடின. இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த செல்வமணி சற்று கண்ணயர்ந்தான்.

அவனருகே மேய்ந்து கொண்டிருந்த ஆடுகள் திடீரென மே... மே... எனக் கத்தியது. ஆடுகளின் சத்தம் கேட்டு செல்வமணி பதற்றத்துடன் எழுந்தான். ஆடுகளைக் கொன்று தின்ன அங்கிருந்த புதர் மறைவில் நரி ஒன்று தயாராக இருப்பதைக் கண்டான். தன் வசமிருந்த தடியால் நரியை அடித்து விரட்டினான். அடிபட்டுக் காயமடைந்த நரி ஊளையிட்டுக் கொண்டே ஓடி ஒளிந்தது. மாலை நேரம் ஆனது. செல்வமணி ஆடுகளை வீட்டிற்கு ஓட்டிச்சென்றான். மலையில் எங்கோ சிங்கம் முழங்கும் சத்தம் கேட்டது. அந்த சத்தம் கேட்டு காடே பரபரப்பாகி விட்டது.

பறவைகள் பயத்தில் இறக்கைகளை படபடவென அடித்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடின. ஆந்தை அலறியது; யானை பிளிறியது. புற்றிலிருந்த பாம்பு சத்தம் கேட்டு வெளியே வந்து சீறியது.





கீரி செடிகளில் மறைந்து ஓடியது. மயில் அகவியது. புல் மேய்ந்து கொண்டிருந்த குதிரை கனைத்தது.

ஆடுகளை ஓட்டிச்சென்ற செல்வமணிக்கு பயத்தால் நாக்கு வரண்டது. தன் கைவசம் வைத்திருந்த குவளையில் இருந்த நீரைப் பருகினான். ஆடுகளை வேகமாக வீட்டிற்கு ஓட்டிச்சென்றான். செல்லும் வழியில் வண்டுகள் முரலும் ஓசை கேட்டது. பயத்துடன் ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தான். அங்கு தொழுவத்தில் கட்டியிருந்த பசு செல்வமணியைக் கண்டதும் மகிழ்ச்சியில் கத்தியது.

அவனுடைய செல்ல நாய்க்குட்டி குரைத்தது. ஆடுகளை பட்டியில் அடைத்தபின் தொட்டியிலிருந்த நீரில் குளித்து விட்டு தன் அம்மாவிடம் சென்றான். சிறிது நேரத்தில் தங்கை மலருடனும், பாட்டியுடனும் சாப்பிட அமர்ந்தான். சாப்பிட்டுக்கொண்டே காட்டில் தான் நரியை விரட்டியதையும், சிங்கம் முழங்கியபின் காட்டில் விலங்குகள் பரபரப்புடன் ஓடியதையும் கதை போல் கூறினான். செல்வமணியின் துணிவையும், ஆடுகளை பாதுகாப்பாக ஓட்டி வந்ததையும் அம்மா மிகவும் பாராட்டினார்.



இரவு வந்தது. அனைவரும் தூங்கச் சென்றனர். முற்றத்து ஓலையில் எலி தன் குஞ்சுகளுடன் கீச்... கீச் என விளையாடிக் கொண்டிருந்தன. நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு செல்வமணி வெளியே வந்தான். அங்கே பூனை ஒன்று கத்திக் கொண்டிருப்பதைக் கண்டான். நாய் குரைத்தது. இரண்டையும் விரட்டி விட்டு தன் படுக்கைக்குச் சென்றான். பாட்டியும், தங்கையும் அவன் வரும் முன்பே தூங்கி விட்டனர்.

வேப்பமரத்திலிருந்த சேவல் கொக்கரக்கோ.... கோ... எனக் கூவும் ஓசையைக் கேட்டு செல்வமணி கண் விழித்தான். காகமும் தன் பங்கிற்கு கா.... கா.... எனக் கரைந்தது.

சேவல் கூவிய சத்தம் கேட்டு செல்வமணி உற்சாகமாகத் துள்ளி எழுந்தான். குளித்து விட்டு பள்ளி செல்ல தயாரானான். தான் காட்டில் பெற்ற அனுபவங்களை தன் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலுடன் பள்ளிக்குச் சென்றான். பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் ஒலிக்கின்ற விதத்தினையும் இவ்வாறு கூற வேண்டுமென முன்னோர் கூறிய மரபினைத் தொன்று தொட்டுப் பின்பற்றி வருகிறோம்.

## கற்பவை கற்றபின்

- விரிவானத்தில் கொடுக்கப்பட்ட 'என்ன சப்தம்' என்ற பகுதியை தகுந்த உச்சரிப்புடன் வகுப்பறையில் படிக்க.
- செல்வமணியின் செயல்பாடுகளை பற்றிய கருத்துகளை குழுவாக அமர்ந்து கலந்துரையாடுக.
- விடுமுறை நாளான ஞாயிறு அன்று நீங்கள் எங்கு சென்றீர்கள்? வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
- நீங்கள் அறிந்த கதையை வகுப்பறையில் கூறுக.
- வகுப்பில் குழுவாக அமர்ந்து இப்பாடப்பகுதிக்கு ஏற்ற தலைப்பினை தெரிவு செய்திடுக.

### வினாக்களுக்கு விடையளிக்க

1. செல்வமணி ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?
2. செல்வமணி செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.

### சிந்தனை வினா

1. நம்மைப்போல் விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடைத்தால் எப்படி இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவதுபோல் ஓர் உரையாடல் எழுதிக்காட்டுக.
2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங்குகள் ஏதேனும் ஆபத்து நேர்வதற்கு முன்பு ஏன் ஒலியெழுப்புகிறது என எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

# 4. மரபுச் சொற்கள்

நாம் நம் உணர்வுகளை வெளிப்படுத்த மொழியைப் பயன் படுத்துகிறோம். ஆனால் அவை ஒரே மாதிரியாக எல்லா இடங்களிலும் வழங்குவது இல்லை. வட்டாரத்துக்கு வட்டாரம் மாறுபடுகிறது. இதையே வட்டாரவழக்கு என்கிறோம்.

ஆனால் பழங்காலந்தொட்டு நம் முன்னோர்களால் இது இப்படித்தான் அறியப்படவேண்டும் என்று எப்பொருளை எச்சொல்லால் வழங்கினார்களோ அப்பொருளை இன்றளவும் அவ்வாறே வழங்குவது மரபுச் சொற்களாகும்.

## விலங்குகளின் இளமைப்பெயர் மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| ஆட்டுக் குட்டி | அணிற் பிள்ளை |
| குரங்குக் குட்டி | கீரிப் பிள்ளை |
| குதிரைக் குட்டி | சிங்கக் குருளை |
| நாய்க்குட்டி | புலிப் பறழ் |
| மான் கன்று | எலிக் குஞ்சு |
| யானைக் கன்று | குருவிக் குஞ்சு |

## ஒலி மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| குயில் கூவும் | யானை பிளிறும் |
| மயில் அகவும் | சிங்கம் கர்ச்சிக்கும் / முழங்கும் |
| ஆந்தை அலறும் | நாய் குரைக்கும் |
| கிளி பேசும் | புலி உறுமும் |
| சேவல் கூவும் | குதிரை கனைக்கும் |
| காகம் கரையும் | நரி ஊளையிடும் |

## வினை மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| அம்பு எய்தார் | காய் பறித்தான் |
| ஆடை நெய்தார் | பால் பருகினான் |
| கூடை முடைந்தார் | அவர் எழுப்பினான் |
| பாய் பின்னினார் | மாத்திரை விழுங்கினான் |
| சோறு உண்டான் | வெற்றிலை தின்றாள் |

### பூச்சிகள், பறவைகள், விலங்குகள் - இருப்பிட மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| சிலந்தி வலை | நண்டு வளை |
| கரையான் புற்று | கோழிப் பண்ணை |
| குருவிக் கூடு | மாட்டுத் தொழுவம் |
| ஆட்டுப் பட்டி | யானைக் கூடம் |
| குதிரைக் கொட்டில் | புலிக் குகை |

தோட்டம், காடு, கொல்லை, தோப்பு போன்றவையும் மரபுச்சொற்களே.

( எ.கா. ) பூந்தோட்டம், ஆலங்காடு, சோளக்கொல்லை, மாந்தோப்பு போன்றவை.

### தாவரங்களின் உறுப்புப்பெயர் மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| தென்னங்கீற்று | அவரைப்பிஞ்சுகள் |
| பனைஓலை | மாவடு |
| சோளத்தட்டை | வாழைக்காய் |
| வாழை இலை | வெள்ளரிப்பிஞ்சு |
| திராட்சைக்குலை | தென்னங் குரும்பை |

மா, பலா, வாழை போன்றவற்றின் இலையை 'இலை' என்றும், நெல், தினை, வரகு, புல் போன்றவற்றின் தண்டை 'தாள்' என்றும் மரபுச்சொற்களாக வழங்குகின்றன.

## கற்பவை கற்றபின்

- நீங்கள் அறிந்து கொண்ட மரபுச் சொற்களைக் கூறுக.
- நாம் ஏன் மரபுச் சொற்களைப் பேசுகிறோம் என்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.

## மதிப்பீடு

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் சொல்வது ----------------------

அ) பழைமை  ஆ) புதுமை  இ) மரபு  ஈ) சிறப்பு

2. யானை ---------------------------

அ) கத்தும் ஆ) பிளிறும் இ) கூவும் ஈ) அலறும்

3. 'ஆந்தை அலறும்' என்பது ---------------------------

அ) ஒலிமரபு ஆ) வினைமரபு

இ) இளமைப்பெயர் மரபு ஈ) இருப்பிடப்பெயர் மரபு

4. புலியின் இளமைப்பெயர் ---------------------------

அ) புலிப்பறழ் ஆ) புலிக்குட்டி இ) புலிக்கன்று ஈ)புலிப்பிள்ளை

5. 'பூப்பறித்தாள்' என்பது ---------------------------

அ) வினைமரபு ஆ) பெயர்மரபு

இ) ஒலி மரபு ஈ) இளமைப்பெயர் மரபு

## ஆ. ஒலி மரபுகளைப் பொருத்துக.

1. சிங்கம் - கூவும்
2. அணில் - அலப்பும்
3. மயில் - முழங்கும்
4. குயில் - கீச்சிடும்
5. குரங்கு - அகவும்

## இ. உயிரினங்களின் படங்களுக்கு உரிய ஒலிமரபை வட்டமிடுக.

1. மயில்  - கூவும், அகவும், பிளிறும், கத்தும்
2. கிளி  - அலப்பும், பேசும், கூவும், கீச்சிடும்
3. குரங்கு  - அகவும், கீச்சிடும், சீறும், அலப்பும்
4. ஆடு  - பேசும், கத்தும், பிளிறும், கூவும்
5. குயில்  - அலப்பும், பிளிறும், அகவும் கூவும்
6. யானை  - கத்தும், கர்ச்சிக்கும், உறுமும், பிளிறும்

ஈ. வினை மரபுகளைப் பொருத்துக.

| | |
|---|---|
| 1. நீர் | பறித்தாள் |
| 2. முறுக்கு | எய்தான் |
| 3. உணவு | குடித்தான் |
| 4. அம்பு | தின்றான் |
| 5. பூ | உண்டான் |

உ. ஒலி மரபுச்சொற்களை எழுதுக.

1.  --------------------------------------------------------

2.  --------------------------------------------------------

3.  --------------------------------------------------------

4.  --------------------------------------------------------

5.  --------------------------------------------------------

6.  --------------------------------------------------------

ஊ. வினாக்களுக்கு விடையளிக்க

1. மரபு என்றால் என்ன?

2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச்சொற்கள் இடம்பெற்றுள்ளன?

3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## மொழியை ஆள்வோம் !

### கேட்டல்

- ஓசை நயமுடைய தமிழ்ப்பாடல்களை கேட்டு மகிழ்க.
- வானொலி, தொலைக்காட்சி, ஊர்த்திருவிழா, பள்ளி விழாக்கள் ஆகியவற்றில் நிகழும் கவியரங்கம், பட்டிமன்றம் ஆகியவற்றை பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### பேசுதல்

- உங்களுக்கு பள்ளிவிழாப் பட்டிமன்றத்தில் பேசிய அனுபவம் உண்டா? உமக்குப் பிடித்த விலங்குகளுள் ஏதேனும் ஒன்று பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

### படித்தல்

- தமிழ் செய்தித்தாளில் முக்கிய செய்திகளை படித்து மகிழ்க.
- சிறுவர் இதழ்களில் வரும் கதைகளை படித்து மகிழ்க.

### எழுதுதல்

**1. சொல்லக்கேட்டு எழுதுக.**

1. ஆடை நெய்தார்
2. முன்னோர்
3. தென்னை ஓலை
4. சுவர் எழுப்பினார்
5. இயற்கை
6. மாட்டுத்தொழுவம்
7. முறுக்குத் தின்றான்
8. அறிவு
9. முருங்கைப் பிஞ்சு
10. வாழை இலை

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. பட்டிமன்றம் - ..............................
2. இனிமை - ..............................
3. உலகம் - ..............................
4. வெற்றி - ..............................

**3. கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.**

(கலா படிக்கிறாள், புறா பறந்தது, அம்மா தும்மினார், குழந்தை அழுதது, நாய் தூங்கியது)

1. அம்மா என்ன செய்தார்? ..............................
2. கலா என்ன செய்தாள்? ..............................
3. எது பறந்தது? ..............................
4. தூங்கியது எது? ..............................
5. குழந்தை என்ன செய்தது? ..............................

## 4. எடுத்துக்காட்டில் உள்ளது போல் மாற்றி எழுதுக.

(எ.கா) 1. நான் கிளாஸ் டெஸ்டில் பஸ்ட் மார்க் வாங்கினேன்.
நான் வகுப்புத் தேர்வில் முதல் மதிப்பெண் வாங்கினேன்.

2. எனக்கு பிடித்த சப்ஜெக்ட் தமிழ்

--------------------------------------------------------------------

3. கம்மிங் பிரைடே டெம்பிலுக்கு செல்வோம்.

--------------------------------------------------------------------

## 5. பத்தியை படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் என்பது உலகில் முதல் மனிதன் பேசிய முதல் மொழி என்பது ஆய்வாளார்களின் கருத்து ஆகும். இன்று உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளங்களைத் தன்னகத்தோடு பெற்றுள்ளது. வளமான சொற்களை உடையது நம் அன்னைத் தமிழ் மொழி.

1. தமிழ்மொழி பற்றி ஆய்வாளர்களின் கருத்து யாது?
2. இன்று உலகில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?
3. தமிழ்மொழி எவ்வளங்களை தன்னகத்தே பெற்றுள்ளது?
4. யாருடைய மொழி வளமான சொற்களை உடையது?
5. பிரித்து எழுதுக - ஆறாயிரம் ------------------------ + ------------------------

## 6. பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க.

( ஊக்கம், உண்மை, நட்பு, அறிவு, கல்வி, முயற்சி, சினம், பொறாமை)

------------------------ உடையவன் மாணவன் ------------------------ அற்றவன் மாணவன்

------------------------ கற்பவன் மாணவன் ------------------------ தவிர்ப்பவன் மாணவன்

------------------------ பெறுபவன் மாணவன் ------------------------ செய்பவன் மாணவன்

------------------------ பேசுபவன் மாணவன் ------------------------ கொள்பவன் மாணவன்

## மொழியோடு விளையாடு

**1. தமிழின் இனிமை பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------ ------------------------------

**2. குறிப்புகளை கொண்டு விடைகளை கண்டுபிடிக்க**

1. அப்பா வேறு சொல்

| | | |
|---|---|---|
| | ந் | |

2. அம்மா - வேறு சொல்

| | | |
|---|---|---|
| | | னை |

3. எதிர்ச்சொல் தருக: இரவு

| | | |
|---|---|---|
| | | ல் |

4. காகங்களைப் போல் நாம் பிறரிடம் வேண்டும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உண்ணுதல் |

5. ஔவையார் எழுதியது

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

6. பூவின் வேறு பெயர்

| | | |
|---|---|---|
| | | |

**3. கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க:**

1. திருக்குறளை இயற்றியவர் ----------------------------
2. ‘அகத்தியம்’ என்னும் தமிழ் இலக்கண நூலை எழுதியவர் --------------
3. ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்போல் இனிதாவதெங்கும் காணோம்’ என்று பாடியவர் ----------------------------
4. கனகசபை என்ற புதுமைப்புலவர் ----------------------------
5. முத்தமிழ் என்பது ---------------------- , இசை, நாடகம்.
6. தமிழ் பெண்பாற்புலவர் -----------------------------

7. திரைகடல் ஓடியும்......................... தேடு.

8. ........................ வாழ்ந்தால் கோடி நன்மை.

9. ஔவையார் சொன்ன ஆரம்பப்பாடம் ........................

10. ஏறு தழுவுதல் எளிய தமிழில் ........................ விரட்டு.

11. பொங்கல் பானை கழுத்தில் ........................ கொத்து கட்டு.

12. வயலில் தண்ணீர் ஓடும் கால் ........................

13. வானில் நிலா தெரியாத நாள் ........................

14. தமிழ் மாதங்களில் எட்டாவது மாதம் ........................

15. சந்திரனின் மற்றொரு பெயர் ........................

## 4. சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்குக.

(எ.கா) கல்வி - கல், கவி

1. மணிமேகலை 2. பள்ளிக்கூடம் 3. பாடப்புத்தகம் 4. மாடிவீடு

## 5. சொற்களை கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| தேவி | படித்தாள் | பாடம் | வீட்டிற்கு | நான் |
| படித்தேன் | சென்றேன் | சென்றாள் | பள்ளிக்கு | வந்தாள் |

1. .................................... .................................... ....................................

2. .................................... .................................... ....................................

3. .................................... .................................... ....................................

4. .................................... .................................... ....................................

5. .................................... .................................... ....................................

## நிற்க அதற்குத் தக...

தாய்மொழியைப் போற்றுவோம்

நாம் பிறமொழிக் கலப்பின்றி பேசுவோம்

## செயல் திட்டம்

- உனக்கு பிடித்த கதை ஒன்றினை எழுதி அதில் இடம்பெற்றுள்ள மரபுச்சொற்களை அடிக்கோடிடுக. வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
- இலக்கிய மன்ற விழாவில் சிறப்புப் பட்டிமன்றம் நிகழ்த்துவதற்கான நிகழ்ச்சி நிரல் தயார் செய்க.
- உங்கள் ஊரிலுள்ள (அ) பள்ளியிலுள்ள நூலகத்தில் இருந்து பாவேந்தர் பாரதிதாசனின் புத்தகங்களைத் தேடிப் படித்து உனக்குப் பிடித்த செய்திகளை எழுதி வருக.
- பாரதிதாசனின் படைப்புகளுள் எவையேனும் ஐந்து புத்தகங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

## தெரிந்து தெளிவோம்

எழுத்துகளை அடையாளம் காண எளிதாக உதவும் பெயர்கள்

| | | |
|---|---|---|
| ண | - | ‘டண்ணகரம்’ |
| ந | - | ‘தந்நகரம்’ |
| ன | - | ‘றன்னகரம்’ |
| ர | - | இடையின ‘ரகரம்’ |
| ற | - | வல்லின ‘றகரம்’ |
| ல | - | மேல்நோக்கு ‘லகரம்’ |
| ள | - | பொது ‘ளகரம்’ |
| ழ | - | சிறப்பு ‘ழகரம்’ |

செயல் திட்டம்

மொழி சார்ந்த எளிய பாடல்களைச் சேகரித்து எழுதி வருக.

## விண்ணப்பம் எழுதுக

### விடுப்பு விண்ணப்பம்

**அனுப்புநர்**

ஏ.கற்பகம்,
ஐந்தாம் வகுப்பு,
நகராட்சி நடுநிலைப் பள்ளி,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

**பெறுநர்**

வகுப்பு ஆசிரியர்,
ஐந்தாம் வகுப்பு,
நகராட்சி நடுநிலைப் பள்ளி,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

அம்மா / ஐயா,

வணக்கம். நாளை என் சகோதரியின் திருமணத்திற்கு சென்னை செல்வதால் மூன்று நாட்கள் மட்டும் விடுப்பு அளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாள் : XX XX XXXX
இடம் : மதுரை

தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
ஏ.கற்பகம்

இயல்
இரண்டு
கல்வி

கவிதைப்பேழை

# 1. மூதுரை

**நுழைவாயில் :**

மூதுரை ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நூல். (மூப்பு + உரை) பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் இது மூதுரை என அழைக்கப்படுகிறது. இதற்கு "வாக்குண்டாம்" என்ற இன்னொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் ‘வாக்குண்டாம்’ என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. இப்போது மூதுரைப் பாடலின் ஒரு பகுதியை பாடியும் கருத்துகளைக் கேட்டும் மகிழ்வோம்.

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

- ஔவையார்



## சொல்லும் பொருளும்

1. அடக்கம் - பணிவு, பொறுமை
2. கடக்க - வெல்ல
3. மடைத்தலை - மடைமுகம், நீர் பாயும் வழி
4. அறிவிலர் - அறிவு இல்லாதவர்
5. கருதவும் - நினைக்கவும், எண்ணவும்
6. உறுமீன் - பெரியமீன்

### பாடல் பொருள்

சிறுமீன்கள் மடையில் பாய்கின்ற நீரில் ஓடிக்கொண்டிருக்க, கொக்கானது தனக்கு பெரிய மீன்கள் இரையாக வரும் வரை அசைவின்றிக் காத்திருக்கும். அதுபோல சிலர் தமக்குரிய காலம் வரும் வரை அடங்கியிருப்பார்கள். எனவே அவர்களை அறிவில்லாதவர் என எண்ணி வெல்ல நினைக்க வேண்டாம்.

**நூல் வெளி :**



காலம் : 12ஆம் நூற்றாண்டு

ஔவை என்பதன் பொருள் : மூதாட்டி அல்லது தவப்பெண்

இயற்றிய நூல்கள் : ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை

ஔவையார் தனது நூலில் நீதிக்கருத்துகளை எளிமையான நடையில் கூறியுள்ளார்.

## கற்பவை கற்றபின்

- பாடலை தகுந்த உச்சரிப்புடன் படித்து மகிழ்க.
- கல்வியின் சிறப்பு பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
- மூதுரைப் பாடலுடன் தொடர்புடைய திருக்குறள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.
- அதன் பொருளை ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்க.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

## மதிப்பீடு

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. என்றெண்ணி என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ______________

அ) என்+றெண்ணி ஆ) என்று+எண்ணி இ) என்றெ+எண்ணி ஈ) என்று+றெண்ணி

2. மடை + தலை இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______________

அ) மடைதலை ஆ) மடைத்தலை இ) மடத்தலை ஈ) மடதலை

3. வரும்+அளவும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................................

அ) வருமளவும் ஆ) வருஅளவும்

இ) வரும்மளவும் ஈ) வரும்அளவும்

4. அறிவிலர் - என்பதன் எதிர்ச்சொல் ..................................

அ) அறிவில்லாதவர் ஆ) படிக்காதவர்

இ) அறியாதார் ஈ) அறிவுடையர்

5. எண்ணுதல் - இச்சொல்லுக்குரிய பொருள் ..................................

அ) வாடுதல் ஆ) வருந்துதல் இ) நனைத்தல் ஈ) நினைத்தல்

ஆ. இப்பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக.

.................... .................... .................... ....................

இ. "மடைத்தலை" இச்சொல்லில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.

.................... .................... .................... ....................

ஈ. பொருத்துக.

1. உறுமீன் - நீர் பாயும் வழி
2. கருதவும் - பணிவு
3. அறிவிலர் - நினைக்கவும்
4. மடைத்தலை - பெரிய மீன்
5. அடக்கம் - அறிவு இல்லாதவர்

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?
2. யாரை அறிவில்லாதவர் என எண்ணிவிடக்கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?

ஊ. சிந்தனை வினா

1. அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக்கூடாது. ஏன்? கலந்துரையாடுக.

# 2. கல்விச் செல்வமும் பொருட்செல்வமும்





**நுழைவாயில் :**

கல்வி என்பது ஒருவரின் அறிவை வளர்ப்பதற்கும், பொருள் என்பது ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அமைகின்றன. கண்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேபோல் கல்வியும், பொருளும் அவசியம் என்பதை இந்த பாடத்தில் காணலாம் வாருங்கள்.

மாலை, பள்ளி மணி அடித்து ஓய்ந்தது. ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மதுமதியும், மணிமொழியும் வகுப்பிலிருந்து வெளியே வந்தனர். இருவரும் உற்ற தோழிகள். இருவரின் வீடும் ஒரே தெருவில் இருந்ததால் பேசிக்கொண்டே வீடுநோக்கிச் சென்றனர்.

**மதுமதி** : நேற்றிரவு தொலைக்காட்சியில் கல்விச்செல்வமும், பொருட்செல்வமும் என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடந்து கொண்டிருந்தது. மிகவும் சிறப்பாகவும், விறுவிறுப்பாகவும் வாதங்கள் நடக்கும் பொழுது திடீரென்று மழை மேகங்கள் திரண்டு பலத்த இடியோசையுடன் மழை பெய்யலாயிற்று. இடியோசையைத் தொடர்ந்து மின்தடை ஏற்பட்டது. அதனால் பட்டிமன்றத்தை முழுமையாகக் கேட்க முடியவில்லை. பட்டிமனறத்தில் நடுவரின் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்பதைப் பார்க்காததால் அது பற்றி அறிந்து கொள்ள ஆவலாக உள்ளது மணிமொழி.

மணிமொழி : கவலைப்படாதே! மதுமதி. தொலைக்காட்சியில் பட்டிமன்றம் பார்த்தவர் யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மதுமதி : சரி வா! மணிமொழி பேசிக்கொண்டே போகலாம்.

மணிமொழி : கல்விச்செல்வமா? பொருட்செல்வமா? என்னும் நேற்றைய பட்டிமன்றத்தில் எது சிறந்தது என நீ நினைக்கிறாய்?

மதுமதி : என்னைக் கேட்டால் கல்விச்செல்வம் தான் சிறந்தது என்று கூறுவேன்.

மணிமொழி : அவ்வளவு திட்டவட்டமாக எப்படிக் கூறுகிறாய்?

மதுமதி : ஆமாம். பாரதிதாசன் 'கல்வி கல்லாதவனை களர்நிலத்தோடு ஒப்பாவான்' என்கிறார். திருவள்ளுவரோ, 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்று கூறியிருக்கிறார்.

மணிமொழி : அவ்வளவு அழுத்தமாக, கல்வியின் சிறப்பைக் கூறிய திருவள்ளுவர் கூட 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றே கூறியிருக்கிறார். நமது எந்த ஒரு தேவையையும் பொருளில்லையேல் பூர்த்தி செய்ய இயலாது.ஏன்? கல்வி கற்பதற்குக் கூட பணம் வேண்டும் அல்லவா?

மதுமதி : 'பணம் பத்தும் செய்யும்', என்பது பழமொழி. வளமான வாழ்க்கைக்குப் பணம் தேவை தான். பணம் படைத்தவருக்கு சொந்த ஊரில் தான் செல்வாக்கு. ஆனால் கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

மணிமொழி : எவ்வளவு தான் கற்றவரானாலும் அவன் ஏதாவது ஒரு செல்வந்தரின் தயவில்தான் வாழ வேண்டியிருக்கிறது.

மதுமதி : கொடுக்கக் கொடுக்கக் குறையக்கூடியது பொருட் செல்வம். நெருப்பால் அழியக்கூடியது. கள்வர்களால் கவர்ந்து செல்லக்கூடியது. நிலையற்றது. ஆனால் கல்விச்செல்வமோ எவராலும் கவரமுடியாதது. பிறருக்குக் கொடுக்க கொடுக்கப் பெருகுவது. கல்விச்செல்வமே 'இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தருவது'. என்றுமே அழியாதது.

மணிமொழி : கல்வி கற்றவரால் பொருளில்லையேல் என்ன செய்து விட முடியும்? எந்த ஒரு செயலைச் செய்வதற்கும் முதலீடு என்ற பணம் தேவைப்படுகிறது. 'பணமில்லாதவன் பிணம்' ; 'பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்' என்ற பழமொழி எல்லாம் நாம் அறிந்தது தானே?

மதுமதி : பண்டைய காலத்தை விட இன்றைய கல்வி வளர்ச்சியும், அறிவியல் முன்னேற்றமும் நமக்கு எண்ணற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மணிமொழி : அறிவியல் துறையிலும், மற்ற துறைகளிலும் புதுமைகளைக் கண்டறிய முதலீடு செய்வதற்கு கற்றுத் தேர்ந்தவர்களுக்கு பணம் தேவைப்பட்டிருக்கும் அல்லவா?

மதுமதி : ஆமாம், அதற்காக அனைத்துமே பணம் தான் என்று கூறுவது தவறு. கல்வி தான் அறிவையும் திறமையையும் வளர்க்கிறது. நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து தன் வாழ்வை நல்வழியில் அமைத்துக் கொள்ள வழிகாட்டுகிறது.

மணிமொழி : அப்படியா! 'பசி வந்திடப் பத்தும் போகும்' என்பது பழமொழி. பொருளில்லையெனில் வறுமை வாட்டும். வறுமை தான் சமூகத்தீமைகளுக்குக் காரணம் ஆகிறது.

மதுமதி : கற்றறிந்தவன் வறுமைக்காலத்திலும் செழுமையாக வாழ்வான். ஆனால் கல்லாதவனோ அறியாமையால் தவறு செய்கிறான்.

மணிமொழி : வசதியான வாழ்விற்கு பொருட்செல்வம் அவசியம். அறியாமை நிறைந்தவன் பெரும் பணக்காரனாகவே இருந்தாலும் அவனது சிறப்பான நல்வாழ்விற்கு கல்வி அவசியம்.

( விவாதம் நீண்டு கொண்டிருந்தது. முடிவுக்கு வராததால் மறுநாள் தமிழாசிரியையிடம் விவாதம் பற்றிக் கூறினர். )

தமிழாசிரியர் : மக்களிடம் அறியாமை என்னும் இருள் நீக்கி, அறிவு என்னும் ஒளி பெறச் செய்வது 'கல்வியே'. 'கல்வி கண் போன்றது'. 'இளமையிலேயே கல்வி கற்பதே மிகவும் சிறந்தது'. 'இளமையில் கல்வி, சிலையில் எழுத்து' என்னும் முதுமொழியை நாம் மறக்கலாகாது.

மணிமொழி : கல்வியின் சிறப்பை தெளிவாகப் புரிந்து கொண்டோம். என்றாலும் பொருள் இல்லாமல் கல்வி மட்டுமே ஒருவன் வாழ்வதற்கு போதுமா?

தமிழாசிரியர் : சரியாகச் சொன்னாய். கல்வியும், பொருளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் எனலாம்.

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து'.

ஒருவன் ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப் பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவக்கூடியது என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

பொருளுடைமை என்பது வெற்றி, பெருமை, அழகு முதலியவற்றை தரும். அது மட்டுமா? உயர்கல்வி பெறும் வாய்ப்பைத் தரும். 'இல்லாரை எல்லோரும் எள்ளுவர்' என்று வள்ளுவர் கூறியதையும் நாம் அறிவோம். எனவே அடிப்படை வாழ்க்கைத் தேவை களுக்கு பொருள் அவசியம் தேவை. ஆனால் நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி மட்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மதுமதியும், மணிமொழியும் :

உண்மை தான் ஐயா. கல்விச்செல்வத்தால் நம் அறிவு தெளிவு பெறும், பொருட்செல்வத்தால் நம் வாழ்வு வளம் பெறும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



## கற்பவை கற்றபின்

- கல்விச் செல்வமா? பொருட் செல்வமா? இதில் எது சிறந்தது என்று நீ நினைக்கிறாய்? ஏன்?
- பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' இதில் உன் கருத்து என்ன?
- யாரால் நம் நாடு முன்னேற்றம் அடையும்? கல்வியால் சிறந்தவர்களா, பொருளால் சிறந்தவர்களா என்பதை உன் வகுப்பறையில் உரையாடுக.

## மதிப்பீடு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. இம்மை என்ற சொல் குறிக்கும் பொருள் ------------------------

   அ) இப்பிறப்பு    ஆ) மறுபிறப்பு    இ) பிறப்பு    ஈ) முற்பிறப்பு

2. காரணமாகின்றது என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ------------

   அ) காரண + மாகின்றது    ஆ) காரண + ஆகின்றது

   இ) காரணம் +ஆகின்றது    ஈ) காரணம் + மாகின்றது.

3. வறுமை இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ------------------------

   அ) செழுமை    ஆ) இன்மை    இ) செம்மை    ஈ) ஏழைமை

4. பொருள் + செல்வம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது -------

   அ) பொருள்செல்வம்    ஆ) பொருள்ச்செல்வம்

   இ) பொருட்செல்வம்    ஈ) பொருட்ச்செல்வம்

5. பொருள் + இல்லார்க்கு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ------------------------

   அ) பொருளில்லார்க்கு    ஆ) பொருள்ளில்லார்க்கு

   இ) பொருலில்லார்க்கு    ஈ) பொருள்இல்லார்க்கு

**ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. பழைமை + மொழி = ------------------------------------------
2. நன்மை + வழி = ------------------------------------------

**இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. பணமென்றால் = ------------------------------------------
2. தொலைக்காட்சி = ------------------------------------------

ஈ. தொடரை முழுமை ஆக்குக. (பத்தும், வளம், கல்வி)

1. பசி வந்திடப் ------------------------ போகும்.
2. கேடில் விழுச்செல்வம் --------------------------
3. பொருளால் நம் வாழ்வு -------------------------- பெறும்.

உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. களர்நிலத்துக்கு ஒப்பாவர் - யார்?
2. கள்வரால் கவர்ந்து செல்லக்கூடியது எது?
3. ‘கல்விச்செல்வமே மிகவும் சிறந்த செல்வம்’ என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை உம் சொந்த நடையில் எழுதுக.
4. ‘பொருட்செல்வமே மிகவும் அவசியம்’ என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.

ஊ. சிந்தனை வினாக்கள்

1. கல்விச் செல்வம் அல்லது பொருட்செல்வம் இரண்டில் ஒன்று தான் உனக்கு வழங்கப்படும் எனில், நீ எதைத் தெரிவு செய்வாய்? ஏன்?
2. "நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி" - இதைப் பற்றி உன் சொந்த நடையில் பேசு.

கூடையிலுள்ள சொற்களுக்கு உரிய எதிர்ச்சொற்களைத் தொட்டியிலிருந்து கண்டறிந்து எழுதுக.








இயல்
இரண்டு



# 3. வறுமையிலும் நேர்மை

**நுழைவாயில் :**

நாம் வறுமையில் வாடினாலும் பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. அதே போல் பிறரிடமிருந்து எடுக்கவும் கூடாது. கிடைப்பதை பகிர்ந்து உண்ண கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இக்கதையின் மூலம் உணர்த்துகிறார்கள். கேட்போமா!



முன்னொரு காலத்தில் சீனாதேசத்தை ஓர் அரசன் சிறப்பாக ஆண்டு வந்தான். நீண்ட காலமாகவே அவனுக்கு குழந்தை பிறக்கவில்லை. அவன் முதுமை அடைந்ததால் தனக்குப் பின் நாட்டை ஆள்வதற்கு வாரிசை தேர்ந்தெடுக்க ஆசைப்பட்டான். அவனுக்கோ அண்ணன் தம்பி இல்லை. எனவே தன் நாட்டு மக்களின் குழந்தைகளில் இருந்து நேர்மை, திறமை, ஆளுமை பொருந்திய ஒருவனை தேர்ந்தெடுக்க எண்ணினார். அதற்காக தன்நாட்டில் உள்ள சிறுவர்களை அழைத்தார். ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அரசரைக் காணக் கூடினர்.

அவர்களைச் சந்தித்த அரசர், உங்களில் ஒருவரை எனக்குப் பிறகு இந்த நாட்டை ஆள்வதற்கு தேர்ந்தெடுக்கப் போகிறேன். அவனே இந்த நாட்டின் இளவரசனாவான் என்று அறிவித்தார். அதைக் கேட்டதும் கூடியிருந்த சிறுவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டனர். இளவரசனைத் தேர்ந்தெடுக்க சிறுதேர்வு ஒன்றை நடத்தப் போகிறேன். அதில் வெற்றி பெறுபவருக்கே இளவரசர் பட்டம் சூட்டப்படும் என்றார். சிறுவர்களில் பெரும்பாலானோர் மிகவும் ஆவலோடும் கவனமாகவும் அரசர் என்ன மாதிரி தேர்வை நடத்தப்போகிறார் என்பதை அறிய அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்பார்ந்த சிறுவர்களே! தேர்வு மிகவும் எளிமையானது. உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதை தரப்படும். அதை உங்கள் வீட்டிற்கு கொண்டு சென்று ஒரு மண் நிறைந்த தொட்டியில் ஊன்றி உரமிட வேண்டும். பின் தவறாமல் தண்ணீர் விட்டு அதை வளர்த்து வர வேண்டும். சில மாதங்கள் கழித்து இங்கு தொட்டியுடன் செடியைக் கொண்டு வர வேண்டும். அதில் சிறப்பாக வளர்ந்து உள்ளதை அரசர் தேர்வு செய்வார். சிறுவர்கள் அனைவரும் தங்களுக்கு கொடுத்த விதைகளை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டனர்.

அக்கூட்டத்தில் ‘லிங்’ என்ற சிறுவன் தனக்களித்த விதையினைப் பெற்றுக்கொண்டு தனது கிராமத்திற்குச் சென்றான். தன் தாயிடம் நடந்த விபரங்களைக் கூறி அரசர் தனக்களித்த விதையைக் காட்டினான். அதனைக்கண்டு மகிழ்ந்த அவன் தாய் ஒரு தொட்டியில் மண்ணை நிரப்பி உரமிட்டு ‘லிங்’ இடம் கொடுத்தார். தொட்டியில் விதையை ஊன்றி லிங் கவனமாக தினமும் போதிய அளவு தண்ணீர் விட்டு வந்தான். அரசரிடம் விதைகளைப் பெற்ற சிறுவர்கள் அனைவரும் ஒவ்வொரு வாரமும் ஓரிடத்தில் தங்கள் தொட்டிகளை கொண்டு வந்து அதில் நடப்பட்ட விதைகளின் வளர்ச்சி பற்றி பேசி மகிழ்வர்.

இப்படியாக சில வாரங்கள் கழிந்தன. லிங் ஒவ்வொரு நாளும் தன் தொட்டியில் தவறாமல் தண்ணீர் ஊற்றி வந்தான். சில நாட்களில் எல்லோருடைய தொட்டியிலிருந்த விதைகளும் முளை விட ஆரம்பித்தது. ஆனால் லிங்கின் தொட்டியில் எந்த விதமான மாற்றமுமில்லை. இதைப் பார்த்த மற்ற சிறுவர்களெல்லாம் லிங்கை கேலி செய்து சிரித்தனர். ஆனாலும் லிங் தவறாமல் ஒவ்வொரு நாளும் தன் தொட்டியில் தண்ணீர் ஊற்றி வந்தான்.

சில மாதங்கள் கழிந்தது. அரசர் அறிவித்தபடி சிறுவர்கள் தங்கள் தொட்டியில் வளர்ந்துள்ளவற்றைக் காட்டி இளவரசை தேர்ந்தெடுக்கும் நாள் வந்தது. லிங் தன்னுடைய தொட்டியை மிக ஆவலோடு நோக்கினான்.அதில் விளைச்சலுக்கான எந்த வித மாற்றமும் இல்லை; ‘என்ன செய்வது? என்னைத் தண்டிப்பார்களா? நான் தினமும் சரியாகத் தானே தண்ணீர் விட்டேன். அதை யார் அறிவார்? என்னை சோம்பேறி என்று நினைப்பார்களோ? என்று வருந்தினான். லிங்கின் தாயாரோ என்ன நடந்தாலும் சரி நீ உன்னுடைய ஒன்றுமே வளர்ந்திராத வெற்றுத் தொட்டியை அரசரிடம் காட்சியில் வைக்க வேண்டும்’ என்று கூறினார்.

எனவே லிங் மற்ற சிறுவர்களுடன் தன்னுடைய தொட்டியையும் அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். தொட்டிகளில் பெரும்பாலான செடிகள் செழிப்பாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்திருந்தது.

அதன் பசுமை நிறம் மனதைக் கவர்ந்தது. அவைகளைப் பார்த்த சிறுவர்கள் எந்த தொட்டியிலுள்ள செடியினை அரசர் தேர்வு செய்வாரோ? என்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், லிங்கின் தொட்டி மட்டும் வெறுமையாக இருந்தது. உயிரற்ற தொட்டியினைப் பார்த்த மற்ற சிறுவர்களெல்லாம் தன்னை ஏளனம் செய்ததையும் கேலியாக சிரிப்பதையும் பார்த்து லிங் மிகவும் சங்கடப்பட்டான். கூனிக் குறுகிப்போனான்.

இப்பொழுது அரசர், சிறுவர்கள் கொண்டு வந்த செடி, பூந்தொட்டிகளைக் காண காட்சி மண்டபத்திற்கு வந்தார். மன்னர் தங்களின் செடி, பூந்தொட்டிகளின் இடையே நடந்து பார்வையிடுவதைப் பார்த்த சிறுவர்கள் தங்கள் நெஞ்சை நிமிர்த்தி இளவரசனாக தங்களைப் பாவித்து நின்றனர். ஒவ்வொரு தொட்டியையும் கவனமுடன் பார்த்து வந்த அரசர் லிங்கின் தொட்டியினை அடைந்தார். லிங்கை அணுகி உன் தொட்டிற்கு என்னவானது? எல்லா தொட்டியிலும் செடி, மரங்களெல்லாம் செழிப்பாக வளர்ந்துள்ள போது உன் தொட்டி மட்டும் வெறுமையாக இருக்கக் காரணம் என்ன? என்றார்.

அரசே! ஒவ்வொரு நாளும் தவறாமல் தொட்டியிலுள்ள விதைக்குத் தேவையான அளவு நீர் ஊற்றி வருகிறேன். என்ன காரணத்தாலோ என் தொட்டியில் எதுவும் வளரவில்லை என்று கூறினான் லிங். மன்னர் அவனைக் கடந்து மற்ற தொட்டிகளையும் காணச் சென்றார். சில மணி நேரத்தில் எல்லாத் தொட்டிகளையும் பார்த்து முடித்தார். சிறுவர்களின் பெருமுயற்சியால் விளைவித்த செழிப்பான செடி, கொடிகளை பார்த்து அவர்களுக்கு தன்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டினையும் தெரிவித்தார். உங்களில் ஒவ்வொருவரும் அரசுப்பட்டம் பெற தீவிரமாக முயற்சி செய்துள்ளீர்கள். எப்படியாவது வெற்றியடைய எந்த வித முயற்சியையும் செய்யவுள்ளதை அறிகிறேன். இந்த நிலையில் உங்களில்

ஒருவனை மட்டும் நான் குறிப்பிட்டு கூற விரும்புகிறேன், அவன் வெற்றுத் தொட்டியுடன் இங்கு வந்துள்ளான். ‘லிங் இங்கே வா!’ என்று லிங்கை அரசர் அழைத்தார். அடுத்து என்ன நடக்குமோ என்று நினைத்த லிங், மெதுவாக தயங்கித் தயங்கி தன்னுடைய வெற்றுத் தொட்டியினை இரு கரங்களில் தாங்கிக் கொண்டு கூட்டத்தின் முன்னே சென்றான்.அரசர் லிங்கிடமிருந்த வெற்றுத்தொட்டியை வாங்கி எல்லா சிறுவர்கள் முன்பும் காட்டினார். செடியில்லாத வெற்றுத்தொட்டியினைப் பார்த்த சிறுவர்கள் அனைவரும் சிரித்தனர். லிங்கை ஏளனமாகப் பார்த்தனர். அரசர் தொடர்ந்து சில மாதங்களுக்கு முன்பு உங்கள் அனைவருக்கும் ஒரு விதை கொடுத்தேன்.

விதையை எடுத்துச் செல்லுங்கள் அதை நட்டு செடியாக வளர்த்து வருடமுடிவில் என்னிடம் கொண்டு வரக் கூறினேன். ஆனால் நான் உங்களிடம் கொடுத்த விதைகள் யாவும் நன்றாகத் தண்ணீரில் வேக வைக்கப்பட்டது. எந்த வகையிலும் அது விளைச்சலுக்கு ஏற்றதல்ல. இப்பொழுது ஆயிரக்கணக்கான தொட்டிகளில் செழித்து வளர்ந்த செடிகளைக் காண்கிறேன். ஒரே ஒரு தொட்டி மட்டும் வெற்றுத் தொட்டியாக இருப்பதையும் காண்கிறேன். நேர்மையும், தைரியமுமே தலை தாங்குவதற்கான மிக முக்கியமான தகுதிகளாகும். அத்தகைய சீரிய குணங்களைக் கொண்ட லிங் மட்டுமே என் வாரிசாக தகுதியுடையவன்; அவனே இந்நாட்டின் இளவரசனாவான் என்றார்.

## கற்பவை கற்றபின்

- நாம் என்னென்ன நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும்? பட்டியலிடுக.
- உனக்குத் தெரிந்த நேர்மையானவர்களைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக?

## மதிப்பீடு

### வினாக்களுக்கு விடையளிக்க

1. அரசர் எதற்காக சிறுவர்களை அழைத்தார்?
2. சிறுவனின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?
3. சிறுவர்கள் ‘லிங்கை’ ஏன் கேலி செய்தனர்?

### சிந்தனை வினா

1. ‘லிங்கின்’ இடத்தில் நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?

# 4. பெயர்ச்சொல், வினைச்சொல்

சொற்களின் வகைகள் : பெயர்ச்சொல், வினைச்சொல்

பெயர்ச்சொல் : ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

எடுத்துக்காட்டு பள்ளி, சூரியன், தை, நிலவு, கண்,
கண்ணன் பள்ளிக்குச் சென்றான்

வினைச்சொல் :

ஒரு செயலைக் (வினையை) குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

எடுத்துக்காட்டு ஓடினான், ஆடினாள், மேய்க்கிறது.
பசு புல் மேய்கிறது.

கீழுள்ள தொடர்களைக் கவனிக்கவும்

விமலா பாடம் படிக்கிறாள்.

இத்தொடரில் விமலா, பாடம் - பெயர்ச்சொல்,
படிக்கிறாள் - வினைச்சொல்

மயில் ஆடியது.

இத்தொடரில் மயில் - பெயர்ச்சொல்,
ஆடியது - வினைச்சொல்

இத்தொடர்களில்

ஒன்றன் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல்

ஒரு செயலைக் குறிப்பது வினைச்சொல்

## கற்பவை கற்றபின்

- இப்பாடத்தில் நீங்களே ஒரு பத்தியை தேர்ந்தெடுத்து அதில் உள்ள பெயர்ச்சொல், வினைச் சொற்களை அடிக்கோடிட்டு அடையாளம் கண்டு கூறுக.
- ஒரு சொல்லைப் படித்தவுடன் அது பெயர்ச்சொல்லா, வினைச்சொல்லா எனப் பகுத்து அடையாளம் காண்க.

அ. கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என வகைப்படுத்துக.

(படித்தான், வரைந்தாள், உண்டாள், விளையாடினான், கம்பன், வருணன், அந்தோணி, ஜெரல்டா, சிங்கம், வீசியது )

| வ.எண். | பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|---|
| 1. | வருணன் | உண்டாள் |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

ஆ. பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொல், வினைச்சொல்லை எடுத்து எழுதுக.

1. ரம்யா வேகமாக ஓடினாள்.
2. ஆசிரியர் பாடம் நடத்தினார்.
3. அமலா நடனம் ஆடினாள்.
4. கொக்கு மீனைப் பிடித்தது.
5. குரங்கு மரத்தில் ஏறியது.

பெயர்ச்சொற்கள்

1. ----------------------------------------
2. ----------------------------------------
3. ----------------------------------------
4. ----------------------------------------
5. ----------------------------------------

வினைச்சொற்கள்

1. ----------------------------------------
2. ----------------------------------------
3. ----------------------------------------
4. ----------------------------------------
5. ----------------------------------------

இ. கதையில் வரும் பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் பட்டியலிடுக.

காட்டில் புலி ஒன்று மானை வேட்டையாடத் துரத்தியது மான் தன்னுயிரைக்காத்துக் கொள்ள வேகமாக ஓடியது. மானைத் தூரத்திச் செல்லும் போது, வேடன் விரித்திருந்த வலையில் புலி சிக்கிக் கொண்டது. வேடன் வலையில் சிக்கியபுலியைக் கூண்டில் அடைக்க முயன்றான். அப்பொழுது புலி வேடனைப் பார்த்து,என்னைக் கூண்டில் அடைக்காதே விட்டு விடு. ஓடிப்போய்விடுகிறேன் என்று கெஞ்சியது. அதற்கு வேடன், அதெல்லாம் முடியாது என்று கூறினான்.

உனக்கு இரக்கமே இல்லையா? என்னை ஏன் துன்புறுத்துகிறாய்? எனக் கேட்டதுபுலி. அதற்கு வேடன் நீ ஏன் மானை துரத்தினாய்? உனக்கு ஒரு நீதி. எனக்கு ஒரு நீதியா? எனக் கேட்டான். புலி அமைதியாய் இருந்தது.

## மொழியை ஆள்வோம் !

### கேட்டல்

- விழாக்காலங்களில் கோவில்களில் நடைபெறும் சிறப்புப் பேச்சுகளைக் கேட்டு மகிழ்க.
- இலக்கியங்கள் நிறைந்த பட்டிமன்றங்களை கேட்டு மகிழ்தல் வேண்டும்.

### பேசுதல்

- ஏழ்மை நிலையில் இருந்து படித்து முன்னேறியவர்கள் பற்றி அறிந்து வந்து பேசுக.
- அப்துல் கலாம் அவர்களைப் பற்றி உம் சொந்த நடையில் பேசுக.

### படித்தல்

- பாரதியார் பாடல்களை படித்து மகிழ்க.
- உங்கள் பள்ளி நூலகத்திலிருந்து நற்பண்பை விளக்கும் ஏதேனும் ஒரு கதையைப் படித்துக் காட்டுக.

### எழுதுதல்

**1. சொல்வதைக் கேட்டு எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. தங்கக்காசு | 2. கொழுக்கட்டை | 3. பணக்காரர் |
| 4. பொறுமை | 5. நற்பண்பு | 6. எண்ணிக்கை |
| 7. தமிழாசிரியர் | 8. பொருளுடைமை | 9. உயர்கல்வி |
| 10. விவாதம் | | |

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. குழந்தைகள் ------------------------------------------------------------
2. வேட்டை ------------------------------------------------------------
3. கணினி ------------------------------------------------------------
4. பாடுபட்டு ------------------------------------------------------------
5. தமிழ்நாடு ------------------------------------------------------------

**3. கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்தித் தொடர்களாக எழுதுக.**

(எ.கா) துளி வெள்ளம் பெரு சிறு - சிறுதுளி பெரு வெள்ளம்

1. முதுகெலும்பு விவசாயமே நாட்டின் - ------------------------------------------

2. அல்ல மின்னுவதெல்லாம் பொன் - ----------------------------------------

3. தரும் உயர்வு உழைப்பே - ----------------------------------------

4. செழித்தால் நாடு காடு செழிக்கும் - ----------------------------------------

5. எள்ளுவர் எல்லாரும் இல்லாரை - ----------------------------------------

## கல்வி - கவிதை

என் முயற்சி என்னை
பலமுறை கைவிட்டதுண்டு
ஆனால் நான் ஒரு போதும்
துவண்டது இல்லை
ஏனென்றால் என்னுடன்
அழியாத கல்வி
இருக்கிறது...

## கொடுக்கப்பட்டுள்ள விடுகதைக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

(விக்கல், அஞ்சல் பெட்டி, ஊசி, முதுகு, மழை)

1. கீழே வரும். ஆனால் மேலே போகாது அது என்ன? --------------------------
2. கண் உண்டு. ஆனால், பார்க்க முடியாது. அது என்ன? ---------------------
3. எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல். அது என்ன? ---------
4. கிட்ட இருக்கும் பட்டணம். எட்டித்தான் பார்க்க முடியவில்லை. அது என்ன? ---------------------
5. உடல் சிவப்பு வாய் அகலம். உணவு காகிதம். அது என்ன? ----------------

### தெரிந்து கொள்வோம்

ஒரு சொல் பல பொருள்

| | | |
|---|---|---|
| அழகு | - | வடிவு, எழில், வனப்பு, அணி |
| அருள் | - | தயவு, அவயம், கருணை, இரக்கம் |
| அன்பு | - | பற்று, பரிவு, ஈரம், நேசம் |
| பா | - | பாட்டு, நிழல், அழகு |
| து | - | கொடு, உண், பிரிவு |

## தமிழோடு விளையாடு

1. பொருள் மாறாமல் உள்ள சொற்றொடர்களைப் படித்து மகிழ்க.

- விகடகவி
- துவளுவது
- தேருவருதே
- மாடு ஓடுமா
- தோணாதோ
- மாறுமா கைரேகை மாறுமா

2. நாபிறழ், நாநெகிழ் பயிற்சி விளையாடலாமா?

நாபிறழ், நாநெகிழ் பயிற்சி சொற்றொடர்கள் எழுதப்பட்ட அட்டைகளை வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பத் தயார் செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொன்றிலும் பின்புறத்தில் 1,2,3 என வரிசைஎண்கள் எழுதி வகுப்பறையின் மையத்தில் வைக்க வேண்டும். மாணவர்களுக்கும் அவ்வாறே எண்கள் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர் ஓர் எண்ணைக் கூற அந்த எண்ணுக்குரிய மாணவர் எழுந்து வந்து அதே எண் எழுதப்பட்ட அட்டையை எடுக்க வேண்டும். அதில் உள்ள தொடரைப் பிழையின்றி விரைவாக வாசிக்க வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

3. சொல்லின் இறுதி எழுத்து முதல் எழுத்தாகக் கொண்டு மற்றொரு சொல்லை எழுதி வட்டத்தை நிறைவு செய்க.



## 5. வருணிப்போம்

படத்தைப் பார்த்து வருணணைச் சொல்லுடன் எழுதுக.



எ.கா : வண்ண வண்ண மலர்கள்

தாவி ஓடும் முயல்

1. ------------------------------------------------

2. ------------------------------------------------

3. ------------------------------------------------

4. ------------------------------------------------

5. ------------------------------------------------

## 6. பயணத்தில் ஒரு நாள்

படங்களுக்குரிய சொற்களை எழுதிப் பத்தியை முழுமையாக்குக.

அசோகன் மதுரையில் இருக்கும்  வீட்டிற்கு மாமாவுடன் சென்றான். பயணசீட்டுகளை  மாமா வாங்கினார். அசோகன்  ஓரத்தில் அமர்ந்து கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்தான். பேருந்து வேகமாகச் சென்றது.  எல்லாம் பின்னோக்கி ஓடுவது போல் இருந்ததைக் கண்டு வியப்படைந்தான். வெளியே தூரத்தில் தெரிந்த  காட்சி  குளிர்ச்சியைத் தந்தது. மலையிலிருந்து சலசலவென்று சப்தமிட்டு பாய்கின்ற  யின் வேகம் அசோகனின் உள்ளத்தை கொள்ளை கொண்டது. பச்சைப் பசேலென்று இருந்த செடிகளும்  பார்ப்பதற்குப் பட்டுக் கம்பளம் விரித்தாற் போன்று மிகவும் அழகாக இருந்தன. வயலின் நடுவே  நிறுத்தப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. சற்று தூரம் சென்றதும் அதிகமாகப் புகையை வெளியேற்றும்  யைக் கண்டான். அதைப் பற்றித் தன் மாமாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அருகில் புல்வெளியில்  மேய்ந்து கொண்டிருந்தது. அசோகன் இதைப் பார்த்துக் கொண்டு வரும்போது யாரோ ஒருவர் தான் செல்லும் பேருந்தை வேகமாகத் தன்  தில் முந்திச் செல்வதைக் கண்டு பதற்றமடைந்தான். மாமாவிடம் அது பற்றி கேட்ட போது இவ்வாறு முந்திச் செல்வதால் விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது தவறான செயலாகும் என்றும் கூறினார்.

தாங்கள் இறங்க வேண்டிய ஊர் வந்ததும் பேருந்திலிருந்து இறங்கி மகிழ்ச்சியோடு பாட்டி  க்குச் சென்றான்.

### நிற்க அதற்குத் தக

- நான் நன்றாக படித்து நல்ல பதவியில் அமர்வேன், என்னால் முடியும்.
- நான் கற்ற கல்வியின் துணை கொண்டு என் திறமைக்கேற்ற வேலையைச் செய்து முன்னேறுவேன்.

செயல் திட்டம்

- பள்ளி நூலகத்தில் கல்வி தொடர்பான கருத்துகள் நான்கைத் தொகுத்து எழுதுக.
- செய்தித்தாள்கள் மற்றும் கணினி போன்றவற்றில் வெளிவரும் கல்வி தொடர்பான செய்திகளைச் சேகரித்து வருக.
- தர்மம், உண்மை, வழிபாடு ஆகிய தலைப்புகளில் கதைகளை தொகுத்து எழுதுக.

## விண்ணப்பம் எழுதுக

### குடிநீர் வேண்டி விண்ணப்பம்

**அனுப்புநர்**

ஊர் பொதுமக்கள்,
வயலூர்.

**பெறுநர்**

ஊராட்சி மன்றத் தலைவர்,
ஊராட்சி மன்ற அலுவலகம்,
வயலூர்.

ஐயா, வணக்கம்.

எங்கள் தெருவில் உள்ள குடிநீர்க்குழாய் உடைந்துள்ளதால் கடந்த இரண்டு நாள்களாகக் குடிநீர் தெருவில் வீணாகிக் கொண்டிருக்கிறது. இதனால், தண்ணீர் இன்றிஎங்கள் தெருவில் வசிப்போர் துன்பப்படுகின்றனர். எனவே, உடைந்து போன குடிநீர்க் குழாயைச் சரி செய்து தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
ஊர் பொதுமக்கள்

# 1. கடல்

**நுழைவாயில் :**

கடல் என்பது காண்போரின் மனதை மகிழ்விக்கிறது. இயற்கை கொடுத்த வரம். கடலின் பெருமைகளை இப்பாடலில் வர்ணித்து கூறியுள்ளார், கவிமணி தேசிக விநாயகனார். பாடலை பாடி மகிழ்வோமா!

எல்லை அறியாய் பெருங்கடலே - நீதான்
இரவும் உறங்காயோ? கடலே
அல்லும் பகலும் அலைகடலே - உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே

பொங்கு திரைகளோ? கடலே - அவை
புரவி நிரைதாமோ? கடலே
எங்கும் உனதொலியோ? கடலே! - அன்றி
இடியின் முழக்கமோ? கடலே!

மலையை வயிற்றடக்கம் கடலே! - எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! - சிப்பி
விளையாடற் குதவும் கடலே!



மழைக்கு மூலமும் நீ கடலே! - அதை
வாங்கி வைப்பதும் நீ, கடலே!
வழுத்து மகிமையெலாம் கடலே! - எவர்
மதித்து முடிக்கவலார் கடலே!

- கவிமணி தேசிக விநாயகனார்

### சொல்லும் பொருளும்

1. அலுப்பு - களைப்பு
2. மகரம் - மீன்
3. மகிமை - பெருமை
4. புரவி - குதிரை
5. திரைகள் - அலைகள்

### பாடல் பொருள்

பரந்து விரிந்த எல்லைகளற்று இருக்கும் பெருங்கடலே! அல்லும் பகலும் உறங்காது அலைகளின் ஓசை ஒலித்துக் கொண்டே இருக்கிறாய். ஓய்வு என்பதே உனக்கு இல்லை. ஒன்றன் பின் ஒன்றாக வருகின்ற அலைகளைப் பார்ப்பதற்கு, குதிரைகள் வரிசையாக வருவதைப் போல காட்சியளிக்கிறது.நீ எழுப்பும் ஒலி அலையோசையால் எழுந்ததா அல்லது இடியோசையால் எழுந்ததா என்று ஐயம் எழுகிறது. உனக்குள்ளே உயர்ந்த மலையை அடக்கி வைத்திருக்கிறாய். மீன் வளங்களையும், விலை மதிப்பற்ற முத்துக்களும் உன்னுள் அடங்கி இருக்கிறது. குழந்தைகள் விளையாடுவதற்கு சிப்பிகள் கொடுக்கிறாய். பூமியை குளிரவைக்கவும் மழை பெய்வதற்கும் காரணமாக இருக்கிறாய். மழைநீரை சேமித்து வைக்கும் பெரிய கலனாகவும் விளங்குகிறாய். வல்லவர்களால் கூட உனது பெருமைகளை எடுத்துரைக்க இயலவில்லை.

### நூல் வெளி :





| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிமணி தேசிக விநாயகனார் |
| பிறந்த ஊர் | : | தேரூர் ( கன்னியாகுமரி மாவட்டம் ) |
| பெற்றோர் | : | சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி |
| காலம் | : | 27.07.1876 முதல் 26.09.1954 வரை |
| விருது | : | கவிமணி பட்டம் |
| நூல்கள் | : | ஆசிய ஜோதி, மலரும் மாலையும், கதர் பிறந்த கதை, குழந்தைப் பாடல்கள், இயற்கைப்பாடல்கள், வாழ்த்துப்பாக்கள், மேலும் பல |

### கற்பவை கற்றபின்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக் காட்டுக.
- இப்பாடல் மூலம் கடலைப் பற்றி நீ அறிந்த செய்திகளை உன் சொந்த நடையில் கூறுக.
- வகுப்பறையில் கடலைப் பற்றி நீ அறிந்த பாடல்களை பாடி மகிழ்க.

## மதிப்பீடு

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. மகரம் என்ற சொல்லின் பொருள் ------------------------------------------------

   அ) மீன் ஆ) நண்டு இ) இறால் ஈ) ஆடு

2. புரவி என்பதன் பொருள் ----------------------------------------------------------

   அ) குதிரை ஆ) மீன் இ) கடல் ஈ) கண்கள்

3. பொங்கி வரும் அலைகள் பார்ப்பதற்கு எவற்றைப் போல் காட்சியளிக்கின்றன? ------------------------------------------

   அ) யானைகள் ஆ) குதிரைகள் இ) மீன்கள் ஈ) சிங்கங்கள்

4. மழையை வாங்கி தனக்குள் சேமிக்கும் கலன் எது? ----------------------

   அ) கிணறு ஆ) மண் இ) குடம் ஈ) கடல்

5. மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது -------------------

   அ) வானம் ஆ) பூமி இ) கடல் ஈ) நெருப்பு

**ஆ. இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

எ.கா. எல்லை - கல்லும்

----------------------- ----------------------- ----------------------- -----------------------

**இ. முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

எ.கா. அல்லும் - அலுப்பும்

----------------------- ----------------------- ----------------------- -----------------------

**ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?
2. பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.
3. கடலைப் பற்றி உமக்குத் தெரிந்த ஐந்து தொடர்களை எழுதுக.

**உ. சிந்தனை வினா**

1. எல்லையறியாய் பெருங்கடல் என்று கூறக் காரணம் என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக.

## 2. படம் இங்கே! பழமொழி எங்கே?



கிளி ஒன்று பழையனூர் மாந்தோப்பில் வசித்து வந்தது. அக்கிளியினை ஊரில் உள்ளவர்கள் கண்ணம்மா என்று அழைப்பார்கள். கிளியிடம் ஒரு பழக்கம் இருந்தது. மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் ஒரு படத்தை மரப் பொந்திலிருந்து எடுத்துக் காட்டும். சிறுவர்கள் அந்த படங்களை பார்த்து அவை உணர்த்தும் பழமொழியைக் கூறிவிட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துக் கொடுக்கும். இதனால் கிளியை 'பழமொழிக் கிளி' என்றும் ஆசையாக அழைப்பார்கள்.

அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகளை நம் முன்னோர்கள் பழமொழிகள் என்றனர். பழங்காலம் முதற்கொண்டே பழமொழிகள் வழக்கிலிருந்து வருகிறது. 'பழமொழி நானூறு' என்றும் பெயரிலேயே நீதி நூல் ஒன்று உள்ளது. மரத்தில் மாங்காய்கள் காய்த்துத் தொங்குவதைக் கண்டு சிறுவர்கள் ஒவ்வொருவரும் தோப்பிற்க்கு வரத் தொடங்கினர்.

கண்ணம்மா நான் அன்பு வந்திருக்கிறேன். ஓ! அன்புவா! நன்றாக இருக்கிறாயா? நான் நன்றாக இருக்கிறேன். உன்னைப் பார்த்து விட்டு அப்படியே மாங்காய் பறித்துச் செல்லலாம் என்று வந்தேன். அப்படியா! மிக்க மகிழ்ச்சி! நான் காண்பிக்கும் படத்திற்குரிய பழமொழியைக் கூறினால் உனக்கு மாங்காய் தருகிறேன் என்று கூறி ஒரு படத்தை எடுத்துக் காட்டியது.



இந்த படம் உணர்த்தும் பழமொழி என்ன? யானை வரும் பின்னே! மணியோசை வரும் முன்னே!

சரியாகக் கூறினாய். இதோ உனக்கு மாங்காய் பறித்துத் தருகிறேன்.

ஐ...! ரொம்ப நன்றி கண்ணம்மா.

எப்படி இருக்கிறாய் கண்ணம்மா?



யார் வந்திருப்பது? நான் தான் ராகுல் வந்திருக்கிறேன். எனக்கும் மாங்காய் வேண்டும் கண்ணம்மா. சரி இந்த படத்திற்கான பழமொழி என்னவென்று கூறு மாங்காய் தருகிறேன்.

மிகவும் எளிதான பழமொழி

இக்கரைக்கு அக்கரை பச்சை

சீக்கிரமாக விடையை கூறிவிட்டாயே! மிக நன்று. இதோ உனக்கு மாங்காய்! ஐ! எனக்கு மாங்காய் கிடைத்து விட்டது. நன்றி கண்ணம்மா!

நீ ஏன் அமைதியா இருக்கிறாய் அஞ்சலி. உனக்கு மாங்காய் வேண்டாமா? வேண்டும் கண்ணம்மா? அப்படியென்றால் இந்த படம் உணர்த்தும் பழமொழி என்னவென்று கூறு பார்ப்போம்.

சூறைக்காற்று வீசுவது இல்லை



தவறாக கூறிவிட்டாயே! இன்னும் கொஞ்சம் யோசித்து பாரேன்.

ஆங்... ... ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும். சரியாகச் சொன்னாய்.

இதோ உனக்கு மாங்காய் வாங்கிக் கொள். நன்றி கண்ணம்மா!

என்னுடன் என் நண்பன் பாபுவும் வந்திருக்கிறான்.

அப்படியா! இந்த படத்திலிலுள்ள பழமொழியைக் கூறச் சொல். மாங்காய் தருகிறேன். எனக்குத் தெரியும்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
சரியா கண்ணம்மா!



மிகவும் அருமை நான் உனக்கு மாம்பழமே தேடிப் பிடித்துத் தருகிறேன். நன்றி கண்ணம்மா!

கண்ணம்மா! நான் விமலா.

விமலாவா? இந்த படத்திற்கான பழமொழியைக் கூறு உடனே மாங்காய் பறித்துத் தருகிறேன்.



காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

கண்ணிமைக்கும் நேரத்தில் கூறிவிட்டாயே!

இதோ மாங்காயை பெற்றுக் கொள் மாங்காய் என்றாலே மிகவும் பிடிக்கும். எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது. கண்ணம்மா நன்றி!

சோமு கிளியின் செல்லப்பெயரைக் கொண்டு பின்னால் இருந்து அழைக்கிறான். பழமொழிக் கிளி! எனக்கு மாங்காய் இல்லையா?



யாரு? என் செல்லப் பெயரை சொல்லி அழைப்பது. சோமுவா? இதோ உனக்கான பழமொழிப் படம்.சரியான பதிலைக் கூறு. தருகிறேன்.

அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்

மிக்க மகிழ்ச்சி! இதோ உனது மாங்காயைப் பெற்றுக்கொள் மிகவும் நன்றி பழமொழிக்கிளி.

யார் அங்கே? தனியாக நின்று கொண்டிருக்கிறாய்? வா இங்கே! ஓ! மனோவா!



ஆமாம் கண்ணம்மா! எனக்கும் பழமொழி கூற வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. அதற்கென்ன இதோ இந்த படத்திற்குரிய பழமொழியை கூறேன்.

ஒற்றுமையே பலம். அட ! உடனே கூறிவிட்டாயே. இதோ உனக்கு மாங்காய். நன்றி கண்ணம்மா!

எப்போதும் நீயே வினாக்களை கேட்டுக்கொண்டே இருக்கிறாயே கண்ணம்மா.

யாரது? நான் தான் செல்வி. கண்ணம்மா நான் ஒரு படத்தை காண்பிக்கிறேன். அதற்கான பதிலைக் கூறு பார்க்கலாம்.

அட! இதுவா எனக்குத் தெரியுமே. சிறு துளி பெரு வெள்ளம்.

சரியாகக் கூறினாய் கண்ணம்மா! இந்தா உனக்கான பழம்.

சிறுவர்கள் அனைவரும் கண்ணம்மா உன்னால் நாங்கள் பழமொழிகளை தெரிந்து கொண்டோம். மீண்டும் நாளைக்கு வருகிறோம். எனக் கூறிவிட்டு மிகவும் மகிழ்ச்சியாக சென்றனர்.

## கற்பவை கற்றபின்

- வகுப்பறையில் உன் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி பேசும் போது பயன்படுத்தும் பழமொழிகளைத் தொகுத்து வந்து மாணவர்களின் கலந்துரையாடுக.
- பாடப்பகுதியில் உள்ள பழமொழிகளையும், அவற்றின் பொருள்களையும் உம் சொந்த நடையில் கூறுக.
- பள்ளி நூலகத்தில் உள்ள 'பழமொழிக் கதைகள்' புத்தகத்தைப் படித்து பழமொழிக்கான விளக்கத்தையும், கதையுடன் வகுப்பறையில் மாணவர்களுடன் பகிர்ந்து மகிழ்க.

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க?

1. மரப்பொந்து - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மரம் + பொந்து ஆ) மர + பொந்து

இ) மரப் + பொந்து ஈ) மரப்பு + பொந்து

2. அக்கரை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அக் + கரை ஆ) அந்த + கரை இ) அ + கரை ஈ) அ + அரை

3. சூறை + காற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) சூறைகாற்று ஆ) சூறக்காற்று

இ) சூறக்காற்று ஈ) சூறைக்காற்று

4. கண் + இமைக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கண்ணிமைக்கும் ஆ) கண்இமைக்கும்

இ) கண்மைக்கும் ஈ) கண்ணமைக்கும்

5. அமர்ந்து + இருந்த - இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) அமர்ந்திருந்த ஆ) அமர்ந்துஇருந்த

இ) அமர்திருந்த ஈ) அமர்நதுதிருந்த

6. பல்லுக்குறுதி - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) பல் + உறுதி
ஆ) பல்லுக்கு + உறுதி
இ) பல்லுக்கு + குறுதி
ஈ) பல்லு + க்குறுதி

## ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) மணியோசை - ---------------------------- + ----------------------------

ஆ) தேனிசை - ---------------------------- + ----------------------------

இ) ஆடிக்காற்று - ---------------------------- + ----------------------------

## இ. பொருத்தமான சொல்லைக்கொண்டு பழமொழியை நிறைவு செய்க.

( புத்தி, அடி, காலை, பயிர், வளையாதது )

1. யானைக்கும் ---------------------------- சறுக்கும்.
2. விளையும் ---------------------------- முளையிலே தெரியும்.
3. ஐந்தில் ---------------------------- ஐம்பதில் வளையாது.
4. ஆத்திரக்காரனுக்குப் ---------------------------- மட்டு
5. ஆழம் தெரியாமல் ---------------------------- விடாதே

## ஈ. சொல்லை இடம் மாற்றிப் பழமொழியைக் கண்டுபிடிக்க

1. உழுவதை அகல விட உழு ஆழ ----------------------------
2. வளையாதது வளையாது ஐம்பதில் ஐந்தில் ----------------------------
3. மிஞ்சினால் அளவுக்கு நஞ்சு அமிழ்தமும் ----------------------------
4. குற்றம் சுற்றம் பார்க்கின் இல்லை ----------------------------
5. வருத்தம் சோம்பல் முதுமையில் இளமையில் ----------------------------

## உ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பழமொழி என்பது யாது?
2. விடுகதை என்றால் என்ன?
3. கிளியைப் "பழமொழிக் கிளி" என அழைக்கக் காரணம் என்ன?
4. இப்பாடத்தில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளைப் பட்டியலிடுக.

## ஊ. சிந்தனை வினா

1. கிளியைப்போல், நீ பழமொழி கூறுவதாய் இருந்தால் என்ன பழமொழிக்கு எப்படிப் படம் வரைந்து விளக்குவாய்? வகுப்பறையில் செயல்படுத்து.

# 3. தப்பி பிழைத்த மான்



கா...... கா......

நண்பனான மானைத் தேடியபடி காகம் கரைந்து கொண்டே சென்றது. ஓடி வந்த மான் இதோ வந்துவிட்டேன் என்றது.

காகம் : நண்பா ! நலமா?

மான் : இருக்கிறேன் நண்பா .........

காகம் : ஏன் மிகவும் சோர்வாக இருக்கிறாய்? உனது குரலில் உற்சாகம் இல்லையே...... என்ன காரணம்?

மான் : மிகவும் பசியாக இருக்கிறேன். எப்படி உற்சாகமாக இருக்க முடியும்.

காகம் : அப்படியா என்னுடன் வருகிறாயா! புல் நிறைந்துள்ள இடங்களை காட்டுகிறேன். அங்கு வயிறு நிறைய புல்லை மேயலாம்.

மான் : நீ என்மேல் மிகவும் அன்பாக இருக்கிறாய். ஒவ்வொரு நாளும் எனக்காக அலைந்து திரிந்து புற்கள் நிறைந்த இடங்களை எனக்குக் கூறுகிறாய். நன்றி.



காகம் : இதற்கெல்லாம் நன்றி தேவையில்லை, நான் சோர்வாக இருக்கும் போது உன் முதுகில் அமர்ந்து பயணம் செய்கிறேன். நாமிருவரும் நண்பர்கள் அல்லவா. ஒருவருக்கொருவர் உதவியாய் இருப்பது ஒன்றும் புதிதல்லவே...... சரி! நண்பா! பேசிக் கொண்டே நெடுந்தூரம் வந்துவிட்டோம். இங்கேயே புல்லை மேய்ந்து விட்டு இருப்பிடம் செல்வோம்.

காகமும், மானும் நல்ல நண்பர்களாக நெடுநாட்கள் இணைந்திருப்பதை ஒரு நரி கவனித்தது. அது மனத்திற்குள், கொழு கொழுவென இருக்கும் இந்த மானை எப்படியாவது கொன்று தின்று விட வேண்டும் என்று நினைத்தது. நரி ஒரு திட்டம் தீட்டியது. நண்பர்கள் இருவரையும் பிரித்துவிட எண்ணியது.

நரி : என்ன நண்பர்களே........ என்னையும் உங்கள் நண்பனாக ஏற்றுக் கொள்வீர்களா?

மான் : அதற்கென்ன........ இன்று முதல் நீயும் எங்கள் நண்பனாக எங்களோடு சேர்ந்திருக்கலாம்.

நரி : நன்றி நண்பா!

காகம் : சரி நேரமாகி விட்டது. நம் இடத்திற்கு செல்லலாம். நரி, தன் இருப்பிடம் நோக்கிச் சென்றது.

காகம் : யாரையும் சீக்கிரமாக நம்பி விடாதே! நண்பா, அது ஆபத்தாக முடியும்.

மான் : எந்த ஆபத்தும் வந்துவிடாது. நரியைப் பார்த்தால் நல்லவனாகவும் நல்ல குணமுள்ளவனாகவும் தெரிகிறது.

காகம் : கண்ணால் காண்பதும் பொய்.
காதால் கேட்பதும் பொய்.
தீர விசாரிப்பதே மெய்.

மான் : பேசியது போதும், வீட்டிற்குச் செல். நானும் இருப்பிடம் செல்கிறேன். மீண்டும் நாளை சந்திப்போம்.

அடுத்த நாள் காலை நரி மானை சந்திக்கிறது.

நரி : நண்பா! நலமா?

மான் : அடடே ! நரியா? என்ன இவ்வளவு காலையில் என்னைத் தேடி வந்திருக்கிறாய்?

நரி : நண்பனைப் பார்க்க நேரம் காலம் ஏது? உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

மான் : ஏன் எனக்கு என்ன? என்னைப் பார்த்து ஏன் பரிதாபப்படுகிறாய்?

நரி : மிகவும் உடல் மெலிந்து காணப்படுகிறாயே..... உணவு சரியாக கிடைக்கவில்லையா? கொழு கொழுவென இருக்க வேண்டிய நீ பஞ்சத்தில் அடிபட்டாற் போல இருக்கிறாயே.....

மான் : உணவுப்பற்றாக்குறை விலங்குகளுக்கும் கூட உள்ளது. வானம் பொய்த்ததால் வனமெல்லாம் வறண்டு கிடக்கிறது.

நரி : மற்ற விலங்குகளைப் பற்றி நமக்கென்ன கவலை? என்னோடு வா எனக்குத் தெரிந்த இடம் ஒன்று இருக்கிறது. அங்கே உனக்கு நல்ல மேய்ச்சல் நிலம் உண்டு. உனக்கு மட்டும் அந்த இடத்தைக் காட்டுகிறேன்.

மான் : இரு நண்பா காகமும் வரட்டும் .........

நரி : காகத்தை வேறொரு நாள் அங்கே அழைத்துச் செல்லலாம். இன்று நீ மட்டும் என்னோடு வா.

மான் : சரி, இவ்வளவு கட்டாயபடுத்தி கூப்பிடுகிறாய். வருகிறேன்.

மானை நரி விளைச்சல் நிலத்தில் கொண்டு விடுகிறது. மான் பயிரை நன்கு மேய்ந்து பசியாறிய பிறகு இருப்பிடத்திற்கு திரும்புகிறது. இச்செயல் காகத்திற்கு தெரியாமல் தொடர்ந்து நீடிக்கிறது. தன் விளைச்சல் நிலத்தை பாழாக்கும் விலங்கை பிடிக்க முடிவு செய்கிறான். நிலத்தின் உரிமையாளர் விவசாயி.



மறு நாள் வழக்கம் போல மான் நரியோடு வயலுக்குச் சென்று பயிரை மேய்கிறது. அந்த நேரத்தில் விவசாயி வருவதைமான் பார்க்கிறது. தப்பிக்க நினைத்த மான், வேகமாக ஓடுகிறது. அருகிலிருந்த கம்பி வேலியில் எதிர்பாராமல் சிக்கிக் கொள்கிறது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த நரி, நல்ல வாய்ப்பு வந்து விட்டதை நினைத்து மகிழ்ந்தது. ஓடிப்போய் அருகிலுள்ள கரும்பு வயலில் மறைந்து கொண்டது.

காகம் : நண்பா ........ நண்பா ........ எங்கே இருக்கிறாய்? என்று காகம் மானைத் தேடி வந்தது.

அய்யோ! இங்கேயா இருக்கிறாய்? என் ஆருயிர் நண்பா! கம்பி வேலியில் மாட்டிக் கொண்டாயே கத்துவதற்குக்கூட முடியாத நிலையில் துடி துடிக்கிறாயே............

சரி ! சரி ! நீ தப்பிக்க ஒரு வழி சொல்கிறேன். விவசாயி உன் அருகில் வரும்வரை நீ இறந்தது போல் அசையாமல் இரு விவசாயி உன்னை வேலியிலிருந்து விடுவித்தவுடன், நான் மரத்திலிருந்து கா....கா....கா.... என்று கத்துகிறேன், உடனே தப்பி ஓடி விடு.

விவசாயி : ஓ.......மானா? நீ தான் இத்தனை நாளாக என் பயிரை தின்று தீர்த்தாயா? இன்று மாட்டிக் கொண்டாய் என்று கூறியவாறே மானைப் பிடிக்க வந்தான். ஓ.. மான் இறந்துவிட்டது போல் தெரிகிறதே. சரி வேலியிலிருந்து விடுவித்து வீட்டிற்கு எடுத்துச் செல்வோம் என்று சொல்லிக் கொண்டே வேலியிலிருந்து மானை விடுவித்தான்.

இதனை மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்த காகம் கா...கா... என்று கரைகிறது, அதுவரை இறந்தது போல் நடித்துக் கொண்டிருந்த மான் கண்ணிமைக்கும் நேரத்தில் உயிர் பிழைத்தால் போதும் எனத் துள்ளிப் பாய்ந்து வேகமாக ஓடியது.





விவசாயி : அடடே ......... என்னை ஏமாற்றிவிட்டாதே!
நீண்ட தடியை எடுத்து ஓடும் மானை நோக்கி வேகமாக வீசுகிறான். அந்த தடி பதுங்கியிருந்த நரியின் மேல் பட்டு நரி மயங்கிக் கீழே விழுகிறது. விவசாயி ஏமாந்து போகிறான்.

சிறிது நேரத்திற்குப் பின் மயக்கம் தெளிந்து எழுந்த நரியிடம்,

காகம் : நரியே! உன் தீய எண்ணம் உனக்கு கேடாக விளைந்தது. நம்பியவர்களுக்கு என்றும் துரோகம் செய்யாதே!



நரி : மன்னித்து விடு நண்பா. என்று வெட்கி தலை குனிந்தது. இனிமேல் இப்படி நடந்து கொள்ளமாட்டேன்.

காகம் : தன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும். நண்பர்களோடு உண்மை அன்புடன் பழக வேண்டும்.

**நட்பின் திருக்குறள் :**

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

**நீதி : "ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்"**

## கற்பவை கற்றபின்

- உண்மையான நண்பர்கள் ஆபத்தில் உதவுபவர்களே, என்னும் தலைப்பில் உனது வகுப்பில் பேசுக.
- தீயோருடன் கொள்ளும் நட்பு, தீமையையே தரும் என்பதற்கு மற்றொரு கதையைக் கூறுக.

## மதிப்பீடு

### வினாக்களுக்கு விடையளிக்க

1. நரி, காகத்திடமிருந்து ஏன் மானைப் பிரிக்க எண்ணியது?
2. நரியை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் காகம் கூறியதென்ன?
3. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?
4. வலையில் மாட்டிக் கொண்ட மானைக் காகம் எவ்வாறு காப்பாற்றியது?
5. "தப்பிப் பிழைத்த மான்" கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொண்ட நீதி யாது?

### சிந்தனை வினா

1. நமக்கு நண்பர்களாக இருப்பவர்களிடம் என்னென்ன நற்குணங்கள் இருக்க வேண்டும்? பட்டியலிடுக.

# 4. சொற்றொடர் அமைப்பு முறை

### எழுவாய் :

எழுவாய் என்பது ஒரு தொடரில் யார், எது, எவை, யாவர் என்ற வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் ஆகும்.

(எழுவாய் எப்போதும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும்)

(எ-கா) ராதா பாடல் பாடினாள், விமலா நடனம் ஆடினாள்.

### செயப்படுபொருள்

ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள் எனப்படும்.

(எ-கா) ரங்கா வானொலி கேட்டான்.
மதுரம் கரகம் ஆடினான்.

### பயனிலை

ஒரு தொடரில் அமைந்துள்ள வினைமுற்றையே பயனிலை என்கிறோம்.

(எ-கா) ராமன் பாடம் படித்தான்.
கபிலன் உணவு உண்டான்.

படித்தான், உண்டான் என்பது வினைமுற்று.

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் ஒரு தொடரில் இடம் பெற்றிருக்கும்.
- எழுவாயோ, செயப்படுபொருளோ இல்லாமலும் தொடர் அமையும்.
  எ.கா. உணவு உண்டான் - இத்தொடரில் எழுவாய் இல்லை.
- ராதா பாடினாள் - இத்தொடரில் செயப்படுபொருள் இல்லை.
- ஒரு தொடர் எழுவாய் அல்லது செயப்படுபொருள் இல்லாமல் அமையலாம். ஆனால், பயனிலை கட்டாயம் இடம் பெற்றிருக்கும்.

### கற்பவை கற்றபின்

- சொற்றொடரின் அமைப்பு முறையை அறிந்து கூறுக.
- உன் வகுப்பறையில் மாணவர்களுடன் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் தொடரில் சில இடங்களில் வருவதையும், அவை வராமல் தொடர் அமைவதையும் கலந்துரையாடுக.

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. எழுவாய் எப்போதும் ........................ லாகவே இருக்கும்.
   அ) வினைச்சொல் ஆ) இடைச்சொல்
   இ) பெயர்ச்சொல் ஈ) உரிச்சொல்
2. பாடல் பாடினாள் - இத்தொடரில் ........................ இல்லை.
   அ) எழுவாய் ஆ) பயனிலை
   இ) செயப்படுபொருள் ஈ) சொல்
3. அமுதன் ஓடினான் - இத்தொடரில் ........................ உண்டு.
   அ) பயனிலை ஆ) செயப்படுபொருள்
   இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

**ஆ. எழுவாய், செயப்படுபொருள், பயனிலைகளை எடுத்து எழுதுக.**

1. மாதவி சித்திரம் தீட்டினாள்.
2. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்
3. அன்பழகன் மிதிவண்டி ஓட்டினான்
4. கிளி பழம் தின்றது.

| வ.எண். | எழுவாய் (யார், எது, எவை,யாவர்) | செயப்படுபொருள் (யாரை, எதனை, எவற்றை) | பயனிலை ( முடிந்த செயல் ) |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

**இ. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இடம்பெற்றுள்ள தொடர்கள் மூன்று கூறுக.**

1. ........................ 2. ........................ 3. ........................

**ஈ. எழுவாய், பயனிலை மட்டும் உள்ள தொடர்கள் மூன்று கூறுக.**

1. ........................ 2. ........................ 3. ........................

**உ. பயனிலை, செயப்படுபொருள் மட்டும் உள்ள தொடர்கள் மூன்று கூறுக.**

1. ........................ 2. ........................ 3. ........................

## மொழியை ஆள்வோம்

### அ. கேட்டல்

- வகுப்பறையில் இயற்கை சார்ந்த பாடல்களை பாடி மகிழ்க.
- மாணவர்களிடம் விடுகதையை கூறி அதற்கான பதிலை கூறச் செய்க.
- சுற்றுச்சூழல் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி வகுப்பு மாணவர்களிடம் கலந்துரையாடுக.

### ஆ. பேசுதல்

- உம் சொந்த நடையில் பழமொழிக் கதைகளை கூறுக.
- நீ சென்று வந்த சுற்றுலா அல்லது ஊரைப் பற்றி வருணித்துப் பேசுக.
- மரங்கள் பேசினால் எவ்வாறு இருக்கும் என்பதை ஒவ்வொரு மாணவரும் வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

### இ. படித்தல்

- உனக்குத் தெரிந்த பழமொழிகளைப் படித்துத் தொகுப்பு தயார் செய்க.
- வகுப்பில் மாணவர்களிடம் பழமொழி, புதிர்களைத் தொகுத்து வருமாறு எழுதுக.

### ஈ. எழுதுதல்

**1. சொல்லக்கேட்டு எழுதுக.**

1. பழமொழி ஒன்று சொல்.
2. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
3. மாங்காய் பறித்துத் தருகிறேன்.
4. கண்ணிமைக்கும் நேரம்.

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. மாணவர்கள் ........................................................................................
2. விளையும் ........................................................................................
3. சென்றேன் ........................................................................................
4. பார்த்தேன் ........................................................................................
5. இல்லை ........................................................................................
6. வீட்டுப்பாடம் ........................................................................................

3. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.

என் உடல் ஏழு நிறங்களால் ஆனது ஊதா கருநீலம் பச்சை மஞ்சள் இளஞ்சிவப்பு சிவப்பு என்ற வரிசையில் நிறங்கள் அமைந்திருக்கும் எனது பெயரின் முன்பகுதி என் இருப்பிடம் பின்பகுதி என்வடிவம் என் பெயரைக் கண்டுபிடித்துவிட்டாயா

4. கதையை நிறைவு செய்க.

ஒரு நாள் விஷ்ணு தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். வயதான மனிதர் ஒருவர், தம்முடைய தள்ளாத வயதிலும் சாலையின் ஓரங்களில் குழிகளைத் தோண்டி விதைகளையும், செடிகளையும் நட்டுத் தண்ணீர் ஊற்றியதைப் பார்த்தார். விஷ்ணு அந்த வயதானவர் செய்யும் செயல்களைத் தொடந்து பார்த்துக் கொண்டே வந்தான். ஒரு நாள் ------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

5. பொருத்தமான சொற்களால் நிரப்புக.

(பல்வலி, உறுதியாக, சொத்தையாக, பல்துலக்க)

மருத்துவர் : கலா, உன் உடம்புக்கு என்ன?

கலா : எனக்கு ------------------------------ ஐயா.

மருத்துவர் : எங்கே வாயைத் திற, பல்லெல்லாம் ------------- இருக்கிறது.

கலா : அதற்கு நான் என்ன செய்ய வேண்டும். ஐயா?

மருத்துவர் : இனிப்புகளை அதிகமாக சாப்பிடக் கூடாது. தினமும் இருமுறை காலையிலும், இரவிலும் -------------------------------- வேண்டும். அப்பொழுது தான் பற்கள் ------------- இருக்கும்.

கலா : நீங்கள் சொன்னதை நான் பின்பற்றுகிறேன். ஐயா.

6. இணைத்துக் கூறுவோம்

- தொடர்புடைய பல சொற்றொடர்களைத் தனித்தனி அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள்.

  எ-கா மேகம் திரண்டது. மழை பெய்தது.
- அனைவரும் வட்டமாக அமர்ந்து கொள்ளுங்கள்
- ஒவ்வொருவரும் ஓர் அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள்

- ஒருவர் எழுந்து கையிலுள்ள அட்டையில் எழுதியுள்ளதைப் படியுங்கள்.
- அதனோடு தொடர்புடைய சொற்றொடர் எழுதியுள்ள அட்டையை வைத்துள்ளவர் உடனே எழுந்து படிக்க வேண்டும்
- மற்றவர்கள் இரண்டு சொற்றொடர்களையும் இணைத்துக் கூற வேண்டும்.
- மேகம் திரண்டதால் மழை பெய்தது.

### 7. தடித்த சொல் விடையாக வருமாறு வினா அமைக்க.

1. நான் நாளை மதுரைக்கு செல்வேன்.
2. தினமும் காலையில் படிப்பேன்.
3. என் தோழியின் பெயர் ராதா.
4. சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
5. எனக்கு சிலம்பம் விளையாட மிகவும் பிடிக்கும்.

### 8. பத்தியை படித்து வினாக்களுக்கு விடையளி

ஒரு நாள் மாலை சத்யா வீட்டிற்கு அவனுடைய நண்பர்களான சோமுவும் ராமுவும் விளையாட வந்தனர். பிறந்து சில நாட்களே ஆன நான்கு அணில் குட்டிகளைத் தோட்டத்தில் கண்டனர். அணில் குட்டிகளைத் தங்கள் வீட்டிற்க்குக் கொண்டு செல்ல விரும்பினர். இருவரும் ஆளுக்கொரு அணில் குட்டியைத் தூக்கிக் கொண்டனர். சத்யா அவர்களிடம் நண்பர்களே இந்த குட்டிகளைத் தாயிடம் இருந்து பிரிக்க வேண்டாம். நம்மை நம் பெற்றோரிடமிருந்து யாராவது பிரித்தால் நாம் எவ்வளவு துக்கப்படுவோம். சிந்தித்துப் பாருங்கள் என்று கூறினாள். நண்பர்கள் அமைதியாக அணில் குட்டிகளைக் கீழே இறக்கி விட்டனர். அணில் குட்டிகள் மகிழ்ச்சியாகத் தம் தாயோடு இணைந்து கொண்டன.

### விடை தருக

1. சத்யாவின் தோட்டத்தில் எத்தனை அணில்குட்டிகள் இருந்தன?
2. நண்பர்கள் இருவரும் சத்யாவின் வீட்டிற்கு எதற்காக வந்தனர்?
3. சோமுவும், ராமுவும் என்ன செய்ய விரும்பினர்?
4. நண்பர்களுக்கு சத்யாவின் அறிவுரை என்ன?
5. நண்பர்கள் அணில் குட்டிகளை எடுத்துச் சென்றனரா? ஏன்?

**செயல் திட்டம்**

உன் பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சி பற்றி அழைப்பிதழ் ஒன்றையும் துண்டு அறிவிப்புகளையும் தயார் செய்க.

## மொழியோடு விளையாடு

### 1. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எழுதுக.

1. Farmer - ----------------------------------------
2. Nature - ----------------------------------------
3. Banyan Tree - ----------------------------------------
4. Cyclone - ----------------------------------------
5. Teacher - ----------------------------------------
6. Before - ----------------------------------------
7. Fan - ----------------------------------------
8. District - ----------------------------------------
9. Train - ----------------------------------------
10. Doctor - ----------------------------------------

### 2. கண்டுபிடித்து எழுதுக.

1. சிலந்திக்கு கால்கள் எத்தனை? ----------------------------------------
2. பசு மேய்வது ----------------------------------------
3. மீன் பிடிக்க உதவும் பொருள் ----------------------------
4. பந்தை அடிக்க உதவுவது ----------------------------
5. மணமுடைய மலர் ----------------------------------------
6. ஒரு வகை தின்பண்டம் ----------------------------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | டு | டை | ன் | த | பு |
| லி | எ | ட் | டு | பா | ல் |
| கா | சு | ம | சொ | ட் | தை |
| வ | ட | ம் | ல | வ | சி |
| ல் | ர் | த | லை | லி | டை |
| ம் | ப | ப் | அ | கு | கை |

3. மகாபலிபுரம் -இச்சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

எ-கா : பலி

1. ------------------------------------------------------

2. ------------------------------------------------------

3. ------------------------------------------------------

4. ------------------------------------------------------

4. ஒரு கதையின் முதல் தொடர் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு தொடர் கூறி கதையை நிறைவு செய்க.

கதைத் தொடர் 1:

அன்று காட்டில் விலங்குகள் ஒன்று கூடி .... .... .... ....

கதைத் தொடர் 2:

கீதா கடைக்குச் செல்லும் வழியில் தன் தோழியைப் பார்த்தாள்.

கதைத் தொடர் 3:

ராமன் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தான். அப்போது முதலை ஒன்று வந்தது.

கதைத் தொடர் 4:

இனியன் பறவைகளை வளர்த்து வந்தான். ஒரு நாள் .

5. கடல் வளங்களை கண்டுபிடிப்போம்

| | | | | |
|---|---|---|---|---|
| லை | ப | மீ | மு | ல் |
| சி | வ | ன் | த் | பா |
| ப் | ள | வ | து | ஆ |
| பி | ம் | லை | சு | மை |
| லை | ச | ங் | கு | அ |

1. ---------------------------- 2. ---------------------------- 3. ----------------------------

4. ---------------------------- 5. ---------------------------- 6. ----------------------------

### 6. சரியான சொல்லை எடுத்து எழுதுக.

1. சுவரில் இருப்பது ................................ (பள்ளி / பல்லி)
2. யானைக்கு இருப்பது ................................ (பலம் / பழம்)
3. கையில் அணிவது ................................ (வலை / வளை)
4. அடிக்க பயன்படுவது ................................ (கோள் / கோல்)
5. சமைக்க உதவுவது ................................ (புளி / புலி)

### 7. சொற்றொடர் உருவாக்குக.

(எ-கா)

மழை - மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.

மலை - உயர்ந்து நிற்பது மலை.

தலை - ................................................................

தழை - ................................................................

கொடை - ................................................................

கோடை - ................................................................

பழி - ................................................................

பலி - ................................................................

அரை - ................................................................

அறை - ................................................................

கறை - ................................................................

கரை - ................................................................

### தெரிந்து கொள்வோம்

கடலைக் குறிக்கும் வேறு பெயர்கள்

1. ஆழி
2. வேலை
3. முந்நீர்
4. பெருநீர்
5. நீராழி
6. பௌவம்
7. சாகரம்
8. புணரி
9. சமுத்திரம்

**நிற்க அதற்குத் தக**

சுற்றுச்சூழலை பாதுகாப்பாக வைத்திருப்பேன்.

ஒரு மரக்கன்றையாவது எனது வாழ் நாளில் நட்டு வளர்ப்பேன்.

என்னால் இயன்ற வரை மழை நீரை சேமிப்பேன்.

## அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்மி | - | அரைக்கும் கல் |
| 2. | அலுப்பு | - | களைப்பு |
| 3. | ஆல் | - | ஆலமரம் |
| 4. | இளகிய | - | இரக்கமுள்ள |
| 5. | இம்மை | - | இப்பிறப்பு |
| 6. | இன்னல் | - | துன்பம் |
| 7. | எஞ்சியிருந்த | - | மீதியிருந்த |
| 8. | கலகம் | - | சண்டை |
| 9. | களர்நிலம் | - | பயிர் செய்ய உதவாத நிலம் |
| 10. | கழை | - | கரும்பு |
| 11. | குயவன் | - | மண்பாண்டம் செய்பவர் |
| 12. | குளிரிள | - | குளிர்ச்சியான |
| 13. | சாதம் | - | சோறு |
| 14. | செருக்கு | - | தலைக்கனம் |
| 15. | நனிபசு | - | மிகுதியாகப் பால் தரும் பசு |
| 16. | நெசவு | - | துணி நெய்பவர் |
| 17. | பஞ்சம் | - | வறட்சி |
| 18. | பாண்டம் | - | பாத்திரம் |
| 19. | புரவி | - | குதிரை |
| 20. | மகரம் | - | மீன் |
| 21. | முற்றல் | - | தேவைக்கு அதிகமான முற்றிய காய் |
| 22. | விவாதம் | - | சொற்போர் |